உ

கடவுள் துணை.

நீதி நூல்.

தஞ்சாவூர் ஜில்லா மாயூரந்தாலுகா முன்சீப்

மகா கனந்தங்கிய

ம-௱-௱-ஸ்ரீ

ச. வேதநாயகம் பிள்ளையவர்களால்

இயற்றியது.

சென்னை, மண்ணடி,

P. R. அப்பாதுரை முதலியாரவர்களது

சரவணபவ அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

[இதன் விலை] 1927. [அணா 8.

7696a

PRINTED AT THE
SARAVANABAVA PRESS,
MANNADY, MADRAS.

இல்லறசாரசங்கிரகம்.

பெருவதற்கரிய மானிடதேகத்தைப் பெற்ற ஒவ்வொருவரும் அறம்பொருள் இன்பம்வீடு என்னும் சதுர்வித புருஷார்த்தங்களையுஞ் சுலபமாய் அடையக்கூடியவழி இல்லறமொன்றே என்று சுதி ஸ்மிருதி இதிகாச புராணங்களிலேச் சொல்லப்பட்டிருத்தலால், அவ் வில்வாழ்க்கையி னின்று ஸ்திரீ புருடர்கள் அனுசரித்துநடக்கவேண்டிய ஒழுக்கம், ஆசாரம், தெய்வபக்தி, ஆலயதரிசனம், விரதம் முதலிய மனேக சற்கருமங்களையும் அவைகளையும் யனுஷ்டிக்க வேண்டிய கிரமங்களையும் அவற்றால் அடையும் பலாபலன்களையும், யாவரும் எளிதிலுணரும்படி மிகவும் தெள்ளிய செந்தமிழ் வசன நடையில் அச்சிட்டுவிலைக்குத் தயாராக விருக்கின்றது இந்நூல் ஒவ்வொரு குடும்பத்திலும் இருக்க வேண்டியது அத்தியாவசிய மாகையால் இந்நூலைஒவ்வொருவரும் வாங்கி ஆனந்தித்துப் பிரபலப்படுத்தக் கேட்டுக்கொள்ளுகின்றனம்.

இதன் விலை அணா 0 10 0

விநாயகபராக்கிரமம்.

இதல் கல்வி கேள்விகளிற் சிறந்த கனதனவான்களுக்கு தெரிவிப்பதாவது:—இது வேதாகம புராணேதிகாசங்களை யாதாரமாகக்கொண்டு தெளிவான தமிழ்நடையில் சர்வ தேவோத் கிருஷ்டமான சிவ பராக்கிரமம் முதலிய அநேக அரியபெரிய நூல்களின் உரையாசிரியரான சைவ ஸ்ரீ ம. தி. பாநுகவியவர்களால் சமஸ்கிருத பாஷையினின்று தமிழில் அழகாக எழுதப்பட்டது. இதுகாறும் வெளிவராதது, படிக்கப்படிக்க இனிமையைத்தருவது, பார்ப்பதற்கு அழகிய 73-படங்களுடன் அச்சிட்டுள்ளது. விநாயகப் பெருமான் உலகாக்ஷணார்த்தமியற்றிய பராக்கிரமங்களை யறிதற்கு தக்கநூலிதுவேயாம். ஒவ்வொருவரும்வாங்கி வாசிக்கவேண்டுமென் இதற்கமைத்துள்ளவிலை ரூபா 1 12 0

எமது விலாசம்:—சிவநேசன் அண்டு கோ.,

35. பாரிஸ் வெங்கடாசல அய்யர் தெருவு,

மண்ணடி போஸ்டு, சென்னை.



உ

சாற்றுக் கவிகள்.

ம-ா-ா-ஸ்ரீ.

திரிசிரபுரம் — மகாவித்வான்,

மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களியற்றியது.

ஆசிரியப்பா

மலர்தலையுலகி னலர்பலவுயிரு
மறமுதலொருநாற் றிறமுமெளிதடையத்
தெய்வமுண் டென்று தெறிதரன்முன்வைத்
தனைத்துணர்ந்தார்க்கே யத்தெவியல்பும்
வாழ்த்துமுணர்ந்தியற்ற மனமுறுமாதலி
னதுபின்னுறவமைத் தரசர்தநீதி
தெய்வநீதியே சிவணுமாதலிற்
பின்னதுநிறுவிப் பெரும்பூம்பால
ரியல்பொடுபிரியா தியலுந்தன்மையிற்
குடிகளதியல்பு குறித்தன்பின்னமைத்
தியல்புறத்தழீஇய விருங்குடிக்கல்லது
ஞானாசாரிய னண்ணாதலி
னனையவன்பெருமை யனையதன்பின்னமைத்
தியலாசிரிய னியலுணர்ந்தார்க்கே
பொய்யாசிரியன் புன்மைதோன்று
மாதலினவனியலதன் பின்னுறநிறீஇ
யாரியனியல்போர்ந் தடிப்பார்க் கன்றித்
தந்தைதாய்வணக்கந் தகாமையினனைத்தன்

பின்னுறநிறீஇப் பெற்றியின்வணங்கு
மைமந்திருக்கணையார் மகிழ்ந்தாற்று தலிவை
யென்றுநூற்கற்பித் திடுதல்வளர்த்தன்
மற்றதன்பின்னைத் தாற்றுழியுதவல்
கல்வியேயாதலிற் காமருமாதரு
முணருமாறதன்பின் னுறலைத்துறுத்திக்
கற்றோர்க்கன்றி மற்றோர்க்கியலா
தென்பதுதோன்ற விருஞ்சகோதரரியல்
பன்புறவதன்பி னமைதாநாட்டி
யுடன்பிறந்தாரொழுக் குறுமில்லறத்திற்
கின்றியமையா தென்பதுதோன்றக்
கிழவன்கிழத்தி யியலதன்பின்னைத்
தியலுறுகிழத்தி யியலுணர்ந்தார்க்கே
யவண்மறுதலையா மணங்கினடை யுணர
வருமதனாலது மற்றதன்பின்னைத்
திவ்வாறொழுகு மியல்புடையயர்ந்தோர் [ர்க்
தாழ்ந்தோர்த்தாங்கலுந் தாழ்ந்தோருயர்ந்தோ
கடங்கியொழுகலு மறனெனவதன்பின்
னென்றன்பின்ன ரொன்றுறநிறுவி
யடங்கியொழுகுநகர்க் ககலும்பொய்மை
பொய்நின்றகலப் போமேகளவும்
களவுநீங்கக் கைவிடுங்கொலையுங்
கொலையத்தொலையக் குலைதருமதுவு
மதுக்குடியகல மாறுஞ்சூதுஞ்
சூதுநீங்கப்பரி தானந்தொலையும்
பரிதானமகலப் படும்புறங்கூறலும்
புறங்கூறலொழியப் போம்பெரியோரைத்
தூற்றலுமஃதறத் தொலையுமுலோபமு

மூலோயநீங்க வொழியுஞ்சோம்பலுஞ்
சோம்பனீங்கத் தொலைதருஞ்சினமுஞ்
சினமதுதீரச் சிதையும்பொறுமையு
மென்பதுதோன்ற விவையெலாமதன்பி
ஞென்றனபின்ன ரொன்றுறவமைத்துப்
பொறுமையொழிந்த புண்ணியர்க்கல்லது
கல்விச்செருக்குங் காரிகைச்செருக்குஞ்
செல்வச்செருக்குஞ் சேராவென்பதற்
கதன்பிஞெவ்வொன்று வடைவுறநிறுவிச்
செருக்கொழிந்தவரே தீயரைச்சேரா
ரென்பதுதோன்ற வதன்பினிணைத்துச்
தீச்சார்பிலார்க்கே செறிபிழைபொறுத்த
லினியசொற்கழற லியலும்பிறர்க்குத்
தீங்குசெய்யாமை செறியுமென்றதன்பின்
முறைபெறவொன்று முயங்குறவைத்து
நினையுமிந்நெறியோர் நெடுந்துயிறுறப்ப
ருரைக்குமதறப்பே ருண்டியுமொழியும்
புகலஃத்திறத்தற் புகழ்தலுமொழியு
மிஃதருதெனிற்புக ழிகழ்மதியாமை
யுண்டாமென்றற் கொன்றன்பின்ன
ரொன்றுறவதன்பினு றமுறைநாட்டிப்
புகழிகழ்மதிக்கும் புண்ணியர்தமக்கே
பரோபகாரம் பலிக்குமென்றுணர
வதன்பினிறுவி யத்தகையோரே
பொருளவாவொழிவரப் புண்ணியர்தகக்கே
மெய்நிலையாண்மையும் வெளிப்படுமவர்க்கே
துன்பப்பகுதியுந் தோன்றிடுமவர்க்கே
யறஞ்செயுந்திறமுண் டாமவர்தாமே

கணிகையரியல்பு கழிப்பரென் றுரை
விளைவுமுறைபயதன்பி னியைதரநாட்டிக்
கரைதருமீனியர் கமுகந்தோட்ட
மென்றாற்போல வியல்விளங்கினத்துக்
கிடர்செயாரெனல்பி னியைதரவமைத்து
நன்னெறிபலவு ணவிலாடதங்கப்
பன்னெறியென்பது கடையுறப்பதித்து
நீதிநூலென்றோர் நிலவுபெயரிட்டுத்
திருமாறந்த தெள்ளமுதொப்ப
யாவருமுவப்ப வினிதினியற்றித்
தந்தனனொருநூ றவலருங்கேண்மைமற்
றன்னவன்யாரெனி னறைகுதுங்கேண்மோ
புலிக்கொடிகயற்கொடி பொருவிற்கொடியுடை
வேந்தர்நாட்டுறை வேளாண்மாக்கள்
சோழியரென்றும் பாண்டியரென்றுங்
கொங்கரென்றும்பெயர் பெற்றனரவருள்
வளரெறும்பீசர் மலைக்குமேற்குக்
கடுப்புனல்பாய்மதிற் கரைக்குக்கிழக்கு
நலந்தருகாவிரி நதிக்குத்தெற்கு
வளம்பொலிநம்பிரான் மலைக்குவடக்கு
நவிலுமிவ்வெல்லை நான்கனுட்பட்ட
விடங்குடிகொண்ட வியல்வேளாளர்
முன்னமுறைத்த முத்தமிழ்வேந்தரு
மெங்கண்மூவருக்கு மியன்முடிசூட்டுதற்
குங்களை யமைத்தன முவந்துகொள்வீரெனக்
கொண்டுமகிழ்ந்தனையார் கோத்தன்மையரே
யாயினரதனு லவர்வாழ்நாடு
கோனாடென்றோர் குலவுபெயர்பெற்ற

துரைக்கருங்குன்ற மொருபதினெட்டு
நத்தமெழுநூற் றறுபத்தாறு
முன்னும்படிநன் குளகுளக்காடு
முன்னுமாயிரத்து முந்நூற்றுமுப்பதாங்
தேவலாயங்கள் சிறக்குநூற்றெட்டு
மிரும்பிரமாலய மிருபத்தெட்டுங்
குறையறக்கொண்டவக் கோனாடுபின்னை
ரலைதருபுனல்வெள் ளாற்றின்தென்பா
லுரைதென்கோனா டொலியூர்க்கூற்றந்
திரைகரையெறியுமத் திருநதிவடபா
லொளிர்வடகோனா டுறையூர்க்கூற்ற
மெனப்பெயர்பெற்றுநன் றியங்குங்காலம்
வண்மையவ்வேளாண் மாக்கண்மிகப்பெருகி
வடகோனாட்டில் வண்குளத்தூரிற்
பெருதிருத்தலின்மிகப் பெரியகோனாடென்
றொருபெயர்பெற்றவவ் வொண்குளத்தூரிற்
கொங்குராயர் கோத்திரமதனில்
வந்தவதரித்த செந்தமிழ்க்குரிசி
லிரும்புவியேத்து மிளையான்குடியி
லருமுனைவாரி யன்னம்படைத்த
குருமணிமாறனங் குலமெனுங்கொண்ட
லவிர்விரையாச்சிலை யாண்டார்திருமலை
யுடையான்கருவரா னுகளரியாற்றுன்
குளிர்புனல்வயறுறுங் குலவுகோனாட
னமரரும்புகழ்வே ளாணகுளத்தூரா
னுச்சைச்சிரவ முறழும்பரியா
னயிராவதநிக ராயதிண்களிற்றுன்
குளிர்மதுப்பொழியுங் குவளைமாலிகையா

னுலகமூன்று முணர்கொடைமுரசான்
வெற்றிக்கொடியெனு மேழிக்கொடியா
னடங்கலர்நடுங்க வடர்க்குமாணையா
னளவில் பன்னூலு மறிபவுணர்ந்தோன்
பண்பெலாமோருருப் படைத்தெனப்பொலிவோ
னாருணிநீர்நிறைந் தற்றேயுலகவாம்
பேரறிவாளன்றிருவெனப்பெரியோ
ருரைத்தவாக்கியத்திற் கொருசான்றாகப்
பயன்படுசெல்வம் படைத்துமகிழ்பூமா
னடைந்தோர்வெங்கலி யடர்க்குந்திறலோன்
பிறர்மனை நோக்காப் பேரறிவாளன்
கற்றோர்நட்புக் கழலாக்கனவா
ஞனிலமுவப்ப நடத்துநீதியா
னரும்பொருள்செறியு மைந்திணைக்கோவை
நம்பாற்கேட்ட கருபுகழ்ப்பெரியோன்
வலந்தரு நதிக்குலவள்ள
னலந்தருவேத நாயகமாலே. (1)

விருத்தம்.

தெரியவிருவேறுலகத்தியற்கை திருவேறு தெள்ளியராதலும் வேறென்றுள்ளபடியுரைத்த, வரியபுகழ் வள்ளுவர்தம் வார்த்தையினை மறுத்தானரசர், காரிய நடவு மதிகாரத்தொடுநா, லுரியவெல்லாவுணர்ந்து பெருஞ்செல்வமுங் கல்வியுமிக்கொருங்கடைந்து பொருட்கொடையி லெரப்பிலனாகி, விரியவனி மகிழ்வொருநீ திநாவியற்றிவிளங்கிய சீர்வேத நாயகக் குரிசிலனே.

வள்ளுவனாதியரே நன்னீதிநூலுரைப்பதற்கு வல்
லாரென்று, துள்ளுவார் யாவருமனைய துணைமையாயி
னுங் குளத்தூர்ச்சுகுணவள்ள, லுள்ளுவர்பாலருணிறு
வும் வேதநாயகமகிப னுரைத்தநீதி, தள்ளுவர்யா ராத
விற்றேற் றேகாரந்தவிர்த் திசைத்தறகுதியாமே. (3)

ஓதிநூலுணர்ந்தகுளத் தூர்வேதநாயகமா லுவப்
பிற்செய்த, நீதி நூறேவியலாசிரியனியலுணர்த்துதலா
னிகரின்ஞானச், சோதிநூலெ...ச்சொலலா மிந்நூன்
மு னெந்நாலுஞ் சொல்லிற் கானூல், பாதிநூன் முக்
கானூ லுலட்டுநூல் சிலம்பிநூல் பருத்திநூலே. (4)

வில்லாரு மதிற்குளத்தூர் வேதநாயகமகிபன்
விருப்பிற்செய்த, நல்லாருண்மகிழ்நீதி நூலினுளகற்ப
னையு நயமுமோரி, னெல்லாருங் கற்றவரே யெல்லா
ரும் பாடுநரேயெல்லாருந்தாஞ், சொலலாருமறவினரே
யறிவினர்தக் ததியவருஞ் சூடுவாரே. (5)

முன்னோர்களுரைத்த பெருநீதிநூற் பொருடெ
ரியமுயலினம்மா, பின்னோர்க ளுரைத்தவுரை பலவு
மவையோ ரினுமையம் பிறந்தொன்றற்கொன், றன்னோர்
சொன் மாறுபடும் பொருள்விளங்க வுருபுமுதலவிழ்த்
துப்பாடு; மன்னோர்நம் வேதநாயக முகிலூல்போலு
ளதோ மதிக்குங்காலே. (6)

பொருளுடையோ னீயேயோ வடதிசைக்கோம
கனுமுளன் புவனங்காக்கு, மருளுடையோ னீயேயோ
நெடுமாலுமுளனீதி யமைநூல்சொலலுந், தெருளுடை
யோ னீயேயோ வள்ளுவனு முளன்குளத்தூர்ச் செல்

வாநாளு, மிருளுடைய வெபூகதிர்நேர் வேதநாயக மகிபா வியம்புவாயே. (7)

தாவினூற் பொருட்கேள்வி யுறலதிகமதற்கதிகந் தானேகற்றல், மேவியதை வெளிப்படுத்த லதற்கதிக மதற்கதிகம் வியன்பாச்செய்தல் பாவினுங்கற்பனை யமைத்தலதற்கதிக நீதிநூல் பாடலுளுந், பூவினிடை யதிகமெனில் வேதநாயகமகிபன் புகழெற்றாமே, (8)

சேல்பாயும் புனற்குளத்தூர் வேதநாயகமகிபன் செய்தநீதி, நூல்பாயுமறிஞரே நுண்ணியராய்ச்சிறந்து வரு நோன்மையாலே, வேல்பாயுங் களிற்றரசர் மேன் மேலும் விருப்பமுற விளங்கியின்பச், சால்பாயுங்கட வுளடிக் கீழுறைவரெந்நாளுந் தவாதுதானே. (9)

நூலியற்றி யீதலொன்றே யுள்ளதெனக் கொள்ளலென்னாலுமோர்நம், மாலியற்றிக் கொடுத்திடு மைந் திணைக்கோவை யேற்றனையா லளவிலாத, சேவியற்று புனற்குளத்தூர் வேதநாயகமகிபா சிறப்பச்செய்யுள், பாவியற்ற லேற்றவினை யிரண்டினுநீ யெப்போதும் பயிலுவாயே, (10)

ஆயபுலியாளு மாங்கிலேய மன்னராண்டோ ராயிரத்தென்னூற்றம்பத் தொன்பதனுக் கொத்த, தூய புகழ் காளயுத்தி யாண்டுறைதத்திங்கடொகு தஞ்சைச்சபாசிகாழித் தாலூகாவின், மேயமுன்சீபதிகாரஞ் செலுத்திடுநன்னாளின் விளங்கு குளத்தூர்ச் சவரிமுத்துமகிபால, னேயவரோதயன் வேதநாயகப் பேர்ச்சூரிசி னீதிநூலியற்றியரங்கேற்றினனன் குறவே

சாற்றுக்கவிகள் முற்றிற்று.

உ

கடவுள் துணை.

நீதி நூல்.

காப்பு.

ஆதிநூலொன்று மரும்பயன் யாருந் தெளிவா
னீதி நூலொன்று நிகழ்த்தவே—மாதிரமோ
டித்தரை யனைத்தையு மியற்றியினி திற்றிதிசெய்
கத்தன்மல ரொத்தகழல் காப்பு.

வேறு.

மாதிரந்தனில் வாழ்பவர் யாவருந்
நீதிகந்தறச் செய்கைமுயலுவா
னீதிநூலை நிகழ்த்த நிகரிலா
வாதிதேவ னடியிணை யேத்துவாம்.

அவையடக்கம்.

வெயிலினைச்சோதிசெய்வான் விளக்கிடல போலுங்காகங், குயிலினுக்கிசையுணர்த்துங் கொள்கையே போலுநட்ட, மயிலினுக்குணர்த்துங்கான வாரணமெனவும் யாவும் பயிலுலகிற்கு நீதிபகரயான் றுணிவுற்றேனல். (3)

பானுவின் கதிரையுண்ட பனிங்கொளி செய்தல் போதும், வானுலாங் கொண்டல்பெய்யு மழையினைத்

தழையிற்றுங்கித், தானும்பெய் தருவைபோலுந் தமி ழொரு மூன்றுமாராய்ந், *தானுவார் கவிசொல்வோர் முன் னறிவிலேன்பாடலுற்றேன்.

முடவரே யாய § வந்தர் முன்னின்று பார்த்துவ க்கத், திடமொடு†மூகர்மாடச் செவிடர்கேட்டதிசயிக் கக், கடலுலகினிற் கண்டென்னக் கனவினுங்கலையை த்தேரா, மடமையே னுலகநீதி வகுத்திடத்துணிந் தேன்மன்னோ. (3)

பயன்கொள்வோ ரதனைநல்கும் பசுவுருவிலதென் றோரார், வியன்சிணைவளைவுநோக்கார் விளைந்ததீங் கனி பறிப்போர், கயங்கொள்சே றகற்றித்தெண்ணீர் கைக் கொள்வா ரென்னநூலி, னயன்கொள்வா தன்றிப்பாவி னவையைநோக்கார் மேலோரே. (4)

வேலைவாயுண்டநீரை மேகஞ்சிந்தினுமே சிந் தும், காவிடைக் கொண்டநீரைக் கழனியக் காற்குநல் கும், பாலர்கற்றவை யாசான்பாற் பகர்வர்யா னூலு ணர்ந்த, சிலர்பாற்கற்றதன்றோ செவியுற நவின்றே னம்மா. (5)

கோவிலைப்பழிக்கின்றெண் குடீனயும் பழித்த தொப்பாம், காவினைப் பழிக்கினுண்டார் கடிமலர்ப் பழித்ததொப்பாம், வாவியைப் பழிக்கிற்கொண்டவண் புனற் பழித்ததாமென், பாவினைப் பழிக்கினீதிப் பயனை யும் பழித்ததாமே. (6)

---

*ஆனுதல்-நிலைபெறுதல். §அந்தர்-குருடர். †மூகர்,ஊமையர்

உ

கடவுள் துணை.

நீதி நூல்.

முதல் - அதிகாரம்

தெய்வமுண்டெனல்.

மண்டப மாதிகண்டோர் மயனுள னென்னல்போலுங், குண்டல முதல்கண்டோர் பொற்கொல்லனுண் டென்னல்போலு, மொண்டுகில் கண்டோர் நெய்தோ னொருவனுண் டென்னல்போலு, மண்டமற் றகண்டஞ் செய்தோ னுளனென வறிவாய்நெஞ்சே. (1)

தீட்டுவோ னின்றியாமோ சித்திரத்திகழ் பொற்பாவை யாட்டுவோனின்றித்தானேயாடுமோ தில்வியாழின், மீட்டுவோ னின்றிக்கீதம் விளையுமோசராசரங்க, ளூட்டுவோ னொருவனின்றி நன்கமைந் தொழுகுங் கொல்லோ. (2)

மரமுத லசைதலாற்கா லுளதென மதிப்பரெங்கும், பரவிய புகையாற்செந்தீ யுளதெனப் பகர்வார் சுற்றும், விரவிய மணத்தாற்பாங்கர் வீயுளதென்று தேர்வார், பரனுள னெனுமுண்மைக்குப் பாரெலாஞ் சான்றுமன்றே. (3)

நாதனில்லாத வீடுநாடுமே நடவாதென்னில்
வேதநாயக னிலானேல் விதுகதிர் மீனுதித்தல்
சீகனீர் பெயருக்கள் சீவராசிகள் கதித்தல்
பூதபௌதீகமெல்லாம் புரையற வொழுகற்பாற்றே.

பூதம்யாவுக்குமேனைப் பொருந்திய விசும்பைக் காற்றை, வேதனூலதனை யுணர்ந்தோர் மெய்யுறை யுயிரைநெஞ்சை, யேதமிலறத்தைக் கண்ணாற் பார்த்திலோ மெனினுமுண்டேன்; றோதல்போற்றெய்வந்தானொன் றுளதென றேற்றமம்மா. (5)

வாசமூக்கறியுமன்றி வாய்செவிகண்மெய்தேரா
பேசவா யறியுமன்றிப் பின்னையோர் புலன்றேறாது
நேசமார்தொண்டர்ஞான நேர்த்திரங்கொண்டுகாணு
மீசனைமூகத்தின்கண்ணு மிகத்தில்யார்காணவல்லார்.

வானின்றி மழையுமில்லை வயலின்றி விளைவுமில்லை
யானின்றிக் கன்றுமில்லை யரியின்றியொளியுமில்லை
கோனின்றிக் காவலில்லை குமரர்தா யின்றியில்லை
மேனின்ற கடவுளின்றி மேதினி யில்லைமாதோ. (7)

கதிரவற் கொளியின் றென்னக் கண்ணிலார் கழறல்போலும், *வதிரர்பே ராழியோசை மாறியதென் னல்போலும்; மெதிருறு பொருளைக்காணா திடருறு பித்தர்போலு, மதியிலார் தேவின்றென்ன மருளொடு மியம்புவாரே. (8)

அத்தன்றாய் முன்னோர்தம்மை யறிகிலா னிலரென்பானே, சத்தமின் சுவைகந்தத்தைத் தரிசியா னிலனென்பானே, நித்தனைக் கண்ணிற்காணு நீர்மையா னிலனென்றோதும், பித்தரிற் பித்தர்பாரிற் பேசிடவு ளரோ வம்மா. (9)

* வதிரர்—செவிடர்.

தேவனோ யிலனேன் மோக்கந் தீரகில்லை சேவ தம், பாவபுண்ணி யங்களில்லைப் பரனிலை யென்போ னில்லின், மேவலர் தீயிட்டன்றன் * விபவமெல்லாஞ் சிதைத்துச், சீவனை வதைசெய்தாலென் செய்குவன் சிதடன்றனே. (10)

முதல் அதிகாரம்—தெய்வமுண்டெனல்.

முற்றுப்பெற்றது,

தெய்வத்தன்மையும் வாழ்த்தும்.

2-ம் அதிகாரம்.

ஆதியீ றில்லான்றன்னை யமைத்தகா ரணமொன் றில்லான், கோதிலான் கணத்துளண்டங் கோடிசெய் தழிக்கவல்லா, னேதிடு மொப்பொன்றில்லா னுரு விலா னிருவிண்டங்குஞ், †சோதிதன் னிழலாக்கொ ண்டசோதியைத் துதியாய்நெஞ்சே. (1)

ஆணலன் பெண்ணுமல்ல னஃறிணை யலன்பாரல் லன், சேணலன் புனல்காலல்லன் றீயல னைம்புலத் தாற், காணரும் வடிவனித்தன் கத்தனம் மத்தன் சுத் தன், மாணற முருக்கொண்டன்ன மாட்சியான் கடவு ணெஞ்சே. (2)

தரையெலா முளன்றுரும்பு தன்னினு முளனண் டாண்ட, நிரையெலா முளன்மெய்யாவி நெஞ்ஃஞு முள

---

* விபவம்—செலவம்.

ணியம்பு, முறையெலா முளன்றான்மேவி யுறைபொருள் கெடக்கெடா தான், புரைதபு தன்னைத்தானே பொருவு வோ ரொருவனன்றே. (3)

உடுக்கணம் யாவும்வெவ்வே° றுதயனு மோவ் வொன்றிற்கு, நடுக்கட்பூ வலயஞ்சோம†நபமொடும் வரம்பில்கோடி, யடுக்கடுக் காச்செய்தல்லா மந்தரத் தமைந்துநிற்க. விடுக்கவொணான் றின்றிக்காக்கு மெம்பி ரான் பெரியனன்றோ. (4)

பண்ணிய புவனமெல்லாம் படர்கையிற் பரிக்கு மேக, னண்ணியகரஞ்சொற்றோயி, னழீஇயொன்றோ டொன்றுமோதித், திண்ணிய லகிலகோடி சிதைந்துகு மெனவறிந்தும், புண்ணிய மனுவாற்றேவைப் போற் றிடா வாறென்னெஞ்சே. (5)

இதயந்தன் வேகத்தோடு மெண்ணிலவ் வியத்த காலங், கதமொடு மீச்சென்றாலுங் கடவுண்மெய்ங் நடுவையன்றி, யிதரவங் கத்தைக்காணா தெனின்முடி யெவண்பொன்றுக்கும், பதமெவ ணகண்டாகாரப் ப ராபரற் குரையீர் பாரீர். (6)

விலகரு மருளின்மீக்கூர் விமலனை வாழ்த்தவேண்டி
னலகில்கற் பங்களேநம் மாயுளாய் மும்மைத்தாய
வுலகமோ ருடம்பாய்ந்த வுடம்பெலாம் வாயாய்நித்தம்
பலகவி மாலைசூட்டிப் பரவினு முடியுங்கொல்லோ. ()

உருவில்சூனியமாயாது முணர்விலா திருந்த நம்மைத்
திருவிட லோடுஞானச் சீவனைப் படைத்துச்

---

† நபம் - ஆகாயம் * சாமியம் - உவமானம்

சருவஞன் மையுமேதந்து தன்னையுந் தந்தனுதன்
மருமல ரடிக்குநம்மை வழங்குதல் பெரிதோநெஞ்சே.
பூமிநம் மில்லாமற்றைப் பூதங்கள்பணிசெய்வோரா ஞ்
சோமன்மீன் கதிர்விக்காஞ் சூழ்மரம் பயிராகாரச்
சேமமைப் பாநமக்கித் திரவிய மியாவுநல்குஞ்
சாமியை யுவமித்தேத்தச் சாமிய மியாதுநெஞ்சே.

தோன்றக விடமதென்னுந் துன்பசா கரத்திலத்தன், றேன்றரு மலர்த்தாட்டெப்பஞ் சேர்கிலா தகன்றுநிற்போர், வான்றனைப் பிரிந்தபுள்ளும் வாழுநீர் நீத்தமீனுங், கான்றனை யகல்விலங்குங் காவதீர் நகருமொப்பார். (10)

பாரெலாம் பகைசெய்தாலும் பராபரன் கருணையுண்டேல், சாருமோர் துயருமுண்டோ தாயினுமினியவையன், சீரருளின்றே லெண்ணிறோர்கரி பரிபதாதிபோரணி யுடையேமேனும் பிழைக்குமா றெவன்கொனெஞ்சே, (11)

இருநிதி பெற்றதீன ரெண்ணிடா திகழ்ந்ததொப்ப, வருவமா யுருவமாய்நம் மாருயிர்க் குயிராயண்டம், பெருநில மெங்குமின்பப் பெருக்கெடுத் தோங்கிநிற்குங், கருணையங்கடலாடாது கழித்தனை வாழ்நாளனெஞ்சே. (12)

முன்னவன் றனையுளத்து முன்னமுன்னம்தெவிட்டாக், கன்னலோ வமுதோபாகோ கற்கண்டோ வெனத்தித்திக்கு, மின்னன் மேவாதவன்று னெங்கணுநிறைந்திருந்து, மன்னையைநீத்தசேய்போ லையனைநீத் தாய் நெஞ்சே. (13)

ஆயுணாள் சிலவெங்காம மனந்தர்நோய் சோம்பு
கொண்ட, காயமே வளக்கவென்னில் கருமங்கள் செய
விவ்வாறே, தேயுநாள் கழியநிற்குஞ் சேடநாளற்பமா
குந், தூயநாதனைத் தொழாமற் றொலைக்கின்றாறதையு
னெஞ்சே. (14)

பொங்கலை யாழிதாண்டிப்பொருப்புகழ்கடந்தோ
யாம, லங்குமிங்குந் திரிந்தே யழிந்துபோ முட
லைக்காப்பா, யெங்கணு முள்ளோன்றானுன் னிருக்
கையு னிருந்துபோற்றி, பங்கமில் சுகம்பெற்றுய்யப்
பாரமென் பகராய்நெஞ்சே. (15)

மாசறு கடவுள்பாத மலரிணைத் தினமும் போற்றிப்
பாசமில் சுகப்பெறுமற் பவஞ்சத்து டுழவல்லபம் பொ
ஞசனந் தன்னிலேறி யரசுசெய் தகைமை நீத்துக்
காசனக் கழுவிலேறுங் கசமையே கடுக்குமாதோ. ()

போதநா யகனையுன்னைப் புந்தியே வெந்தீயொப்பாந்
தாதல ரடிவணங்காத் தலைகுலை சிலையாஞ்சீர்சான்
மாதலத் தவனை வாழ்த்தா வாயது தூயதன்று
காதலன் பொடுநீர்தூவாக் கண்களே புண்களாமால்;

கதிரவன் கிரணக்கையாற் கடவுளைத் தொழு
வான் புட்கள், சுதியொடு மாடிப்பாடித் துதிசெயுந் த
ருக்களெல்லாம், பொதியலர் தூவிப்போற்றும் பூதந்
தந் தொழில்செய்தேத்து, மதிர்கட லொலியால் வாழ்
த்து மகமேநீ வாழ்த்தாதென்னே. (18)

அறிவிலா ராசரென்றற் கமைச்சரே சான்றுமன்
னோர், செறிபெருந் தானையான்மெய்த் திரவிலாரென

வறிந்தோம், வறியரென் றிறைஞ்சிரக்கும் வாய்மையா லறிந்தோமென்று, நெறிவழா துலகந்தாங்கு நிருப னைத் துதியாய்நெஞ்சே. (19)

இரவினு மற்றோர்பாரா விடையினும் பாவஞ்செய் வாய், காதலா மலகம்போன்று முக்காலமு முணர் வோனெங்குந், தரமொடு வீற்றிருக்குந் தன்மையெ ள்ளளவு மோராய், பரனிலா விடமொன்றுண்டேற்பவ மவண் செய்நீநெஞ்சே, (20)

2-ம் அதிகாரம் தெய்வத்தன்மையும் வாழ்த்தும் முற்றுப் பெற்றது.

ஆக அதிகாரம் 2- க்குத் திருவிருத்தம் 30.

3-ஆம் அதிகாரம்.

அரசரியல்பு.

எந்தவேளையினு நொந்தவர்துயர் கேட்டிரிடைப்ப வன்றன்தேக, மைந்தனே யெனினும் வதைத்திட வொல்கான் மாக்களின்சுகநலமன்றிச், சிந்தனைமற் ரேர் பொருளினிற் செலுத்தான்றீ மொழிகனவிலும் புகலான், றந்தைபோற்றுய்போ லெவரை மோம்புந் தன்மையென யிறையன்றே. (1)

மன்னுயிரனைத்துந் தன்னுயிரென் னமகிழ்வொடு தாங்கியாரேனு, மின்னலுற்றயாந்தோ மெனக்கலுழ்ந்

திடற்றன் னிருவிழிநீரினையுகுப்பா, னன்னவெங்துய ரைநீக்குமுன் ருமெனென்றயின்றி டான்றயின்றிடானெ வரு, நன்னகரெங்கு முளனெனப்பகர நாடொறுமியங் குவோன்கோனே. (2)

தாயறியாத சேயிருந்தாலுந் தானறியாதவரில்லை, யாயதன்மையினு லறவழிநிற்கு மறிஞரை யறிந்தர்வக் குரிய, தேயவாதிக் கந்தந்துநன்னீதி செலுத்தியெங் கணுமருந்தினுக்குந், தீயவரிலரென் றிசையுறவடக்குந் திறலுளோன் பூதலவேந்தே. (3)

தன்புகழ்கருதி மருவலரோடுஞ் சமர்புரிந்துயிர்களை மாய்த்துத், துன்பமேசெய்யவிழையந்திடான் முற்போர் தொடுத்திடான் றன்னுயிரனைய, மன்பதைக் கிடுக்கண் யாவரேசெயினும் வாளமரியற்றி நீக்கிடுவா, னின்ப துன்பங்க டனக்குமற்றவர்க்கு மேகமென் றெண்ணு வோன்வேந்தே. (4)

தானினிதியற்று மனுநெறுப்படி முன்னுனடந்தற வழிகாட்டி, ஞானநற்குணத்தின் மேன்மையாலெவர் க்கு நாயகன்றனெனத்தெரிந்துத், தானமுந்தைபு மெய்ம்மையுந்தவமுந் தற்பரன்வணக்கமும் பொறை, மானமுமிகுத்து நரரெலாஞ்செழிக்க மகியரசளிப்பவன் மன்னே- (5)

சத்திரஞ்சோலை சாலைகள்குளங்க டண்ணதிமத கொடாலயங்கள் வித்தியாசாலைமாட கூடங்கள் வேறு வேறமைத்து வேளாண்மை, சத்தியாகலா வாணிக மாதிசகலநற்றொழில்வ ரவர்கணித்தியமுயல வித்தை புரக்கு நிருபனேநின்பணு மன்றே. (6)

காதிறைவனுக்குக் கண்ணொலான் மெய்காண் குருனெனு மொருமாற்றி, வாதிகள்சாட்சி சாதகமெல் லாம் வகைவகையினிது கேட்டமைந்த, மோதினிக்கிழ மைநீங்கிடுந்தன்மைவிளையினு நடுவினீங்காது, பாதியா வனுவும் பகுந்து தீர்ப்பதுவே பார்த்திபன் கடமையா மன்றே. (7)

மன்னவன்வலிசெங் கோலினுலன்றி வாளினுற் சேனையாலில்லை, நன்னெறிவழுவா மன்னவன் றனக்கு நாடெல்லாம் பேரனுலகின், மன்னுயிரெல்லா மவன் படையன்றோர் மனமெலா மவனுரைபீட, மின்னதன் மையனு யரசளிப்பவனை யிகல்செயுந் தெறுநருமுள ரோ. (8)

கைப்புரையேற்றுப் பொய்ப்புகழேலாக் காதினன ருள்பொழி கண்ணன், றப்புரைவழங்கா நாவினன்புவி யோர் தாசன்று னென வுணர் மனத்தன், செப்பயன்ம டவார் காணருமுரத்தன் றிருந்தலர் காணரும்புறத்த, னெப்பொழுதினுஞ் சென்றியாருங்காண்முகத்தனீசன ன்புடையவ னிறையே. (6)

கொடுங்கோலரசன்.

கொடியமன்னர்க்குக் குடிகளேயொன்னுர்கோட் டையே யமர்க்களமவர்த, மடிகடோய் நிலமெங் கணும் படுகுழியாமயின்றிடு மன்னமும்விடமா, நெடிய வாசன மே காசனமேடை நிமிருழையோர் நன்றாதர் கடிமனை மயானக் காடெனிற் கொடுங்கோற் காரணருய்புமாறு ளதோ. (10)

3-ம் அதிகாரம் அரசரியல்பு முற்றுப்பெற்றது.

ஆக அதிகாரம் 3-க்குத் திருவிருத்தம் 40

4- ம் அதிகாரம்.

குடிகளியல்பு.

வேந்தனேயில்லா விடினுலகத்து மேலதுகீழ காமனைஞ்செய், காந்தனுக் கடங்கிக் களத்திரநட்வாள் காதலர் தந்தைசொற்கேளார், மாந்தர் வேளாண்மை முதற்றமக்குரிய வளமைகூர் தொழில்களின் முயலார், சாந்தருந்திய ராவரேற்றீயர் தன்மையைச் சாற்றுமா றெவனோ. (1)

நம்மனைமைந்தர் கிரகவாழ்வெல்லா நரபதியாலவனிவனே லெம்மனைதீயர்கைவசமாவ ளருநிதிகொள்ளையா நானும், வெம்மையோ டொருவ ரொருவரையுண்பார் மேலவரசடராள் மெலிவா, ரம்மவீதெல்லாமுணர்ந்தரசாணைக் கமைதனற் குடிகளினியல்பே (2)

வே று.

நதியினு முயர்பனை நந்துங் காறுலாங்
கதியினு முயர்வரைத் தருக்கள் காயுமால்
பதியினு முயர்ந்தடங் காப்பைஞ் ஞிலங்கள்
விதிசெயல் சிதைந்தக மெலிந்து கையுமே. (3)

தரையெனு முடற்கொரு தலைவ னேதலை
நார்பலவுறுப்புக ளலங்கொண் மெய்யாது
சிறமுறும் பொறிவழிச் செல்லுந்தன்மையோ
லரவர சனுக்கமைந் தொழுகும் வையமே. (4)

பானு வெப்புடையவ னெனினும் பானுவே
வானுல வானெனில் வையமுய்யுமோ
கோனருங் கொடியனே யெனினுங் கோவின்றி
மானவ ருய்யவோர் வழியு மில்லையே (5)

படியின்மன் னுயிர்க்கெலாம் பாதுசெய்கின்ற
நெடியமா சேனையை நெறிசெய் மாந்தரைக்
கடியொடுந் தாங்கவூர்க் காரியஞ் செயக்
குடியிறை யிறையவன் கொளுளுங் கொள்கையே. (6)

வேறு.

கோவரிய சீவன்குடிக ளுடலாவார்
சீவன் சும்மாவிருக்கத்தே கமுழைத்தோம்புதல்போற்
பூவலய மீதினிற்றம் * பூட்சிகளி னுழைத்துக்
காவலனைக் காக்கக் கடனுங் குடிகளுக்கே. (7)

4-ம் அதிகாரம்.

குடிகளியல்பு முற்றுப்பெற்றது.

ஆக, அதிகாரம் 4-க்குத் திருவிருத்தம், 47

---

* பூட்சி-சரீரம்.

5-ம் அதிகாரம்.

ஞானாசாரியன் பெருமை.

அகவுரு ளகலஞான விளக்கினையருளினேற்றிச்
சகலமு நல்குங்கேள்வித் தனத்தினை நல்கியாதிப்
பகவன்றன் சொரூபங்காட்டிப்பவமறமிரண்டுங்காட்டி
சுகநிலைகாட்டுந்தியாகத் தோன்றலைமறவெனெஞ்சே. (1)

வேறு.

கானலெனப்படு காய மிதப்பன்
றூனவமேபுவி தங்கவளித்தா
னீன மிலாரிய னென்று மொருங்கா
ஞான வுடம்பினை நல்கின னன்றே.

வேறு.

நாட்டமின்றி யொளியப்பயனை நல்குமனையிற்
பூட்டு பொன்றிறவு கோலினை யலாதுபுகுமோ
வேட்டகத்தரிய நூல்களுளவேனு மினிதாக்
காட்டருட்குரவ னின்றியெவர் காண்பர்பயனே. (3)

ஞானசூரிய னெனுங்குரவ னின்றி நார்த
மீனவெம்பவ விராவை யகலா ரெவருமே
கானம்வாழ் மிருகமா வர்கதிவாயில் பொதியு
மானவர்க் குறைவுளாய் நிரயம்வாய் விரியுமே. (4)

மண்ணிறைக் கடியராயுயிர் வளர்ப்பர் பலரும்
விண்ணிறைக் கடியரா யெவரும்வீடுபெறவே

புண்ணியத் திருமறைப் பொருளை யோதுபுனித
ரெண்ணிடற்கரிய பெற்றியை யியம்ப லெளிதே (5)

ஐம்புலக்கத வடைத்துமனமாவை யறிவாங்
கம்பம்வீக் கியனுருஞ் சுகமெனக் கருதியே
செம்பொனைத் திரணமாமதி திறத்த குதியோர்
தம்பெரும்புக ழியம்புதற்குந் தரமதோ.

வேறு.

தலைகீழுறச் செய்யினுந் தீபம்விண்டன்னை நோக்குங்
கலைதேயினுந் தண்கதிர்விசுமக் கங்குற் றிங்கள்
விலைமாமணி யைப்பொடி செய்யினு மின்னறாது
நிலைநீங்குவ ரோதுயர் மேவினு நீர்மையோரே. (7)

கைத்திட்ட மருந்திலக் காரங்கலந்து கூட்டி
மத்தித்தருள் பண்டிதர்போன மறநோய் தவிர்ப்பா
னெத்திக் கினுங்கேட்பவர் காதுளமின்ப மேவித்
தித்தித்திட வாரியர் நன்மறை செப்புவாரே. (8)

சிறுவாய்க் கலத்துட் டுளியாகச் செலுத்துநீர்போ
லறியாச் சிறுவர்க்கு முணர்ந்தறி வாதவர்க்கும்
வறியார்க்கும் விளங்கிடவே தெளிவா வகுத்து
நெறியைத் தெரிவிப்பர் நன்ஞானெறி நின்றமேலோர்.

வைவார்தமை வாழ்த்தியு நெஞ்சில் வருத்தமுற்று
நைவாருட னைந்தழுதுந் தமை நண்ணித் துன்பஞ்
செய்வாருறு பீழைநினைந்துதஞ் சிந்தை நொந்து
மெய்மாமறை யின்பயனோதுவர் மேன்மையோரே.

வேறு,

பரிதியின் கிரணமங் கணமதிற் படியினு
மரிதின் மாசணுகுறு தகலல்போ லினியநற்
சரிதமில் லவர்குழாஞ் சார்ந்து போதிக்கினுந்
துரிதவெம் பவமுறார் தொன்மறைக்கிழவரே. ()

5-ம் அதிகாரம்

ஞானசாரியன்பெருமை முற்றுப்பெற்றது.
ஆக அதிகாரம் 5-க்கு திருவிருத்தம் 5.

6-ம் அதிகாரம்.

பொய்க்குருவின் தன்மை.

திருடன் பொருட் காவலனாதலுஞ் செல்வழிக்குக்
குருடன் குருடன் றனையே துணைகொள்ளல்போலு
மிருடங்குள மாந்தரை வான்கதியேற்றவெண்ணு
வருடங்கிய நெஞ்சமிலான்குரு வாயவாறே. (1)

பெருவெப்பிணி யாளன்மற்றோர்பிணிபேரும்வண்ணந், திருமந்திரஞ் சொல்வனென் றேதிடிற்றிண்மையாமோ, தருமந்தனை நாட்டவந்தோன்குறை தானுளானே, விருமண்டலமீதவன் சொல்லெவ ரேற்பர்மாதோ. (2)

பாவச் சலதிக்குளுருவகை பாருளோர்க்குக்
காவற்றுணை யாங்குரவன் குணங் கல்வியின்றி

யாவற்றனை. பூண்டவனே யெனிலாருங்கொள்ளா
ரேவத்தெரி யான் * றிமின்மீ தெவரேறுவாரே. (3)

பழிதீர்கலை யாவுமுணர்ந்தும் பலர்க் குரைத்து
மிழிவேயுறத் தாமடங்கா மதி யினரார்க்கும்
வழிகாட்டிட நாட்டுமறத்தையும் வையமேச
விழியற்றவன் கையினில்வைத்த விளக்கு நேர்வார் (3)

சொன்னத் திருடன்சிறு கள்வனைத் தூறியேச
லென்னப்பொரு ளாசையுளான் பிறரிச்சை தீர்ந்து
மன்னத்திரு ஞானமுரைத்தன் மற்றோர் துறக்குல்
பொன்னைக் கவரச்செய்யும் வஞ்சனைபோலு மாதோ.

வேறு.

வாயிற்றேனுந்தன் வாலிற் கொடுக்குஞ்சே
ரீயின் வாயினி லிங்கிதச் சொல்லொடுந்
தீயசெய்கை யுளானைத் தினஞ் சிறு
சேயு மெள்ளுந்தன் சிந்தையு மெள்ளுமே. (6)

இகத்தின் வாழ்வினி லிச்சய முன்றனைச்
சகத்தினிற் குருசாமியென் றோதுதல்
சுகத்தை நீக்கித் துயரஞ் செறிநர
ரகத்தைவீடென றன்றதல் சிவனுமே. (7)

ஆதிதேவனறிவில் லவர் செயுங்
கோதி னைக்கமை கொண்டு பொறுக்கினு
நீதிநூலை யுணர்ந்து நெறி தவிர்
வேதியர்க்கு விமோசன மில்லையே. (8

* திமில் மரக்கலம்.

ஒருமை யாய்த்தன்னுகர நிமித்தமே
தருமவேடந் தரிக்குதல் வெம்புலி
* புருவை தன்னைப்புசிக்கப் புருவையின்
சருமம் பூண்டங்கு சார்த னிகர்க்குமே. (9)

6-ம் அதிகாரம்.

பொய்க்குருவின்றன்மை முற்றுப்பெற்றது.

ஆக, அதிகாரம் 6-க்குத் திருவிருத்தம். 67

7-ம், அதிகாரம்.

பிதாமாதாவை வணங்கல்.

சின்னவோர் பொருடந்தோரைச் சீவனுள்ளளவு முள்ளத், துன்னவே வேண்டுமென்ன வுரைத்தனர் பெரியோர்தேகந், தன்னையாருயிரைச்சீரார்தரணியின் வாழ்வைத்தந்த, வன்னை தந்தைக்குச்செய்யு மருங் கைம்மா றுளதோ வம்மா. (10)

கடவுளை வருந்திச்சூலாய்க் கைப்புறை யுண்டனந்த
மிடர்களுற் றுதரந்தன்னி லீரைந்து திங்கடாங்கிப்
புடவியி லீன்றுபன்னுள் சொற்றனப்பாலையூட்டித்[சே
திடமுற வளர்த்துவிட்டசெல்வியை வணங்காய் நெஞ்

எப்புவி களும்புரக்கு மீசனைத் துதிக்கவேண்டி
னப்பனேதாயேயென்போமவரையே துதிக்கவேண்டி

---

* புருவை-ஆடு.

ளைப்பனை யுளதோவேலை யுலகிற்கட் புலனிற்றோன் றுஞ், செப்பருந் தெய்வமன்னார் சேவடிபோற்றாய் நெஞ்சே. (3)

வைத்தவ ருளமுவப்ப மலர்நிழல் கனியீயாத
வத்தருத்தன்னைவெட்டி யழலிடுமாபோ லீன்று [பாப்
கைத்தலத் தேந்திக்காத்த காதற்றாய் பிதாவை யேம்
பித்தரை யத்தன்கொன்று பெருநரகழற்சேர்ப்பானே

ஈன்றவர் நம்மாலுற்ற வெண்ணரு மிடர்கட்கான் ற, மூன்றுலகமு மொப்பாமோ மூப்பினு விளைப்பாலன் னார், கான்றவன் சொற்கள்கன்னல் கான்றவன் பாகெ னக்கொண், டேண்டுகோ லென்னதாங்கி யூழியஞ்செய் யாய் நெஞ்சே. (5)

ஈங்கெதி ருதவி * வெஃகா தெவருமோ ருதவி செய்யா, ரோங்குஞ்சேய் வாழும் ‡ வீயு முடலெய்க்கும் பொழுதுதம்மைத், தாங்கிடுந் தாங்காதென்னுந் தன் மைநோக் காதுபெற்றோர், பாங்குடன் வளர்க்குமன்பு பாவலாந் தகைமைத்தன்றே. (6)

மண்ணினி லன்னைதந்தை மறமறஞ் செயினுநோ ன்பு, பண்ணினு முடல்வருந்தப் பணபுரி யினுமருந் தென், றுண்ணினுக் களிக்கினுந்துன் புற்றய ரினு மனத்தொன், றெண்ணினுந் தம்பொருட்டன் றின்சு தர்பொருட்டாலன்றே. (7)

ஐயமே யம்மணத்தோ டழுவதை யன்றிபேசச், செய்யாவொன் றறியாநொய்ய சிற்றுடற் சேய்வளர்ந்

* வெஃகல் விரும்பல் ‡ வீதல் - சாதல்.

திங், குப்பவேண் டுவனசெய்தா ருயிரினு மினிதாக் காக்கும், பொய்யிலன் புடைத்தாய் தந்தை போல்பவ ருளரோநெஞ்சே. (8)

மனையவள் வீயின்வேறோர் மனைவியைக் கொள லாம்பெற்ற, தனையரா திபரிறப்பிற்றனித்தனிபெறலா ம்பினும், புனைபொரு ளீங்கின்மற்றோர் பொருளையும் பெறலாமத்த னனையிறந் திடின்வேறத்த னனைவரு வாரோ நெஞ்சே. (9)

வே று.

ஒருத்திபஞ்சகாலத்திற் றாதைக்குத்தன்முலைப்பா லூட்டிக்காத்தா, ளொருத்தமிசைத்தந்தையினைச் சுமந் தோடியொருவனென்று ரிடரைத்தீர்த்தா, னொருத்த ன்றன் றந்தைக்கே யுயிர்கொடுத்தா னெனப்பலவா வுரோமைநாட்டின், சரித்திரஞ்சொல் வதையறிவாய் நெஞ்சமேயின்றோரைத் தாங்குவாயே.

எ-ம் அதிகாரம்

பிதாமாதாவைவணங்கல் முற்றுப்பெற்றது.

ஆக அதிகாரம் - எ - க்குத் திருவிருத்தம் - 77.

---

8 - அதிகாரம்.

பாலரை வளர்த்தலும் படிப்பித்தலும்.

அயர்பொரு ளிரங்கவ ராதனங்கள்போற்
செயப்பிறி தறிகிலாச் சேயர் சுற்றுளோர்

கயப்புறுந் தீச்செயல் கற்கையாலவர்
நயப்புறுஞ் சேர்க்கையை விலக்கனன்றரோ, (1)

வளையிள மரந்தனை நிமிர்த்தல் வாய்க்கும்பொ
ளிளகித பொழுதணி யிறற்றலாகுநல்
வளமுறு வேள்விநூன் மாண்பு நற்குண
மிளமையி லன்றிமூப் பெய்தி னெய்துமோ. (2)

மாலினு விருவரு மருவி மாசிலாப்
பாலனைப் பயந்தபின் படிப்பியாதுயர்
தாலமேற் செல்வமா வளர்த்தநங் கட்கோர்
காலனை வளர்க்கின்ற காட்சிபோலுமே. (3)

தீதுநன் றறிகிலாச் சேயரென் செய்வார்
கோதற வவரைநன் னெறியிற் கூட்டிடா
தேதங்க ளவர்முன்செய் திழிவைக் கற்பிக்குந்
தானதாய் புதல்வர்க்குச் சத்துருக்களே. (4)

சுகமுறு வாழ்விலவெனினுந் தோன்றற்குச்
சகமகிழ் கலையறந் தனைப் பயிற்றுத
லகநினைந்த ததுதரு மாதனந்தனை
யிகபர மிரண்டினை யீதலொக்குமே. (5)

கலைபயிற்றுறாகா தலர்க்குமாநிதி
நிலையென விளிக்குத னெறியில் பித்தர்க்குக்
கொலைசெய்வா ளீவதுங் குழவிதன்னைமா
மலையினோ ரத்துவைப் பதுவுமானுமே, (6)

பயிர்களை யெடுத்திடப் பலனளித்தல்போற்
செயிரினைக் கடிந்துநற் செயல்வியந்தருந்

தயையொடுஞ் சேயினை வளர்க்குந் தந்தைதாய்
தூயருரு வண்ணமத் தோன்றல் காக்குமே. (7)

நிதிசெல வாய்க்கெடு நீசர் வவ்வுவர்
மதியினை மயக்கிவெம் மறம் விளைத்திடுங்
கொதியழ னரகிடுங் குணமுங்கல்வியும்
விதிதரும் பதிதரும் வீடுநல்குமே. (8)

புவிநடை கடவுண்மெய் போதமன் பறஞ்
செவியினோ தாதொரு சேயைப் பார்விட
லவியென வூருமா றறிகிலான்றனைக்
* கவியமில் புரவிவைத் தோட்டுங் காட்சியே. (9)

தீயராய் வறியராய்ச் சிலர் வருந்தலுந்
தூயராய்ச் சிலர்புவி துதிக்க வாழ்தலுந்
தாயினுந் தந்தையாற் சமைந்த தன்மையாற்
சேயரை நன்னெறி செலுத்தன் மேன்மையே. (10)

8-ம் அதிகாரம்

பாலரைவளர்த்தலும் படிப்பித்தலும்

முற்றுப்பெற்றன.

ஆக அதிகாரம் 8-க்கு திருவிருத்தம் 87.

9-ம் அதிகாரம்.

மாதரைப்படிப்பித்தல்.

கல்வியே யறவழி காட்டு மாண்மகன்
செல்வழி யறிந்திடான் வித்தை தேறுமு
னல்வளர் கூந்தலா ரறிய நூலின்றி
நல்வழி யுணர்ந்தி னடக்கற் பாலரோ. (1)

---

* கவியம் - கடிவாளம்.

பெண்மகள் கெடுவளென் றஞ்சிப்பெற்றவ
னுண்மைநூ லவட்குணர்த்தாமை தன்மனைக்
கண்மறு புருடரைக் காணுமென்றதை
யெண்மையாத் தவன்பறித் தேரிதலோக்குமே. (2)

காவலன் பயத்தினாற் கற்பைக் காக்கின்ற
பாவைய ரரியநூற் பயன் றெறிந்திடிற்
பாவபுண் ணியநெறி யறியும் பண்பினாற்
சீவனீங் கினுமப லாரைச் சேர்வரோ (3)

பொருந்துநற் கலைதெரி பூவைகற்பது
திருந்தியே மிகுமலாற்றேய்ந்து போமெனல்
வருந்திடா துயிர்தரு மங்கைமாணிட
ரருந்திடிற் சாவரென் றறைதலொக்குமே (4)

முடவரே நடக்கினு மூங்கை பேசினுந்
திடமொடந் தகர்வழி தெரிந்து செல்லினு
மடமயி லனையர்நூல வாசியாரெனி
லடமினன் னெறிதெரிந் தமைபற் பாலரோ. (5)

அரிவையர் நேசமு மார வல்லினில்
விரிசுடர் விளக்கென விளங்கு வாரவர்க்
குரியநன் னூலுணர்த் தாமை கூடையா
லெரியொளி விளக்கினை மறைத்த லேய்க்குமே, (6)

நீதிநூண் மைந்தர்க்கு நிகழ்த்திமென்மல
ரோத்தியர்க் கோதிடா தொழுத்தன் மெய்யினிற்
பாதியை யேயலங் கரித்துப் பாதிமெய்
மீதினி லணியின்றி விடுத்தலொக்குமோ. (7)

இக்கிளை நகுமொழி யெழின்மின் னாரிணை
மக்கண் மிக்கோரெனன் மடமையா மிரண்
* டக்கமு மொக்குமே யன்றி நல்லக
ணைக்கண்மற் றெக்கணை யிழிவுடைக்கணே. (8)

வேறு.

கலையுணர்ந்தறி யாதவோர் கன்னியை
யுலைவுறுஞ்சமு சாரத்தி னுய்க்குத்
னிலையுணர்ந்தற னீந்தறி யான்றனை
யலைகடற்கண மிழ்த்தலை யொக்குமே. (9)

வேறு.

நல்லறிவேயணி நன்னுதலார்க்கமீ
தில்லவரோடமி ணையந்துகலத்தல்
புல்லுயிர் நீங்குபுழுக்கொள்சவத்தைக்
கல்லுருவைப்புணர் காமநிகர்த்ததே. (10)

9-ம் அதிகாரம்
மாதரைப்படிப்பித்தல் முற்றுப்பெற்றது.
ஆக அதிகாரம் 9-க்கு திருவிருத்தம் 97.

10-ம் அதிகாரம்.

சகோதர ரியல்பு.

தந்தைதாயொருவர்தம்மைத் தாங்கியவுதரமென்று, மூந்தவின்பாலருந்து முலையொன்று வளருமில லொன், றிந்தவாறெல்லாமொன்று யிணைந்தசோ தாரன்புற்று, சிந்தையுமொன்றிப்பாலுந் தேனும்போல் விளங்கனன்றே. (1)

* அக்கம்-கண்.

வேறு.

ஆதரைமிசைநரராயயாவருஞ்
சோதரரெனமிகத் துன்னனன்றென
வேதமேயோதுமேல் விளங்குஞ்சோதரர்
மீதமைநட்பினை விளம்பல்வேண்டுமோ. (2)

பயந்தவர்சோதரர் தமரைப்பண்பொடு
வியந்துபேணுதவன் வேறுளோர்களை
யியைந்துபேணுமென வெண்ணிநீக்குவ
ருயர்ந்தவரவனொடு முறவுதன்னையே. (3)

ஒற்றையொண்சுடரினை யொழிக்குமேல்வளி
கற்றையாப்பலசுடர் கலப்பினமாவளி
சற்றும்வெல்லாதுசூழ் தமர்சகோதரர்
பற்றொடுமருவிடிற் படருறார்களே, (4)

ஓரிழையறுத்திட லெளிதொன்றாகவே
சேரிழைபலவுறத் திரித்ததாம்பினை
யாருமேசிதைத்திடா ரமைசகோதரர்
சீரொடுபொருந்திடிற் றிறல்கொள்வாரரோ. (5)

10-ம் அதிகாரம்.

சகோதரரியல்பு முற்றுப்பெற்றது,

ஆக அதிகாரம் 10-க்கு திருவிருத்தம் 102.

புருடபாரியல்பு.

ஆவியின்றி யுடலில்லை யுடலின்றியாவியிலை யது போற்பத்தா, தேவியெனு மிருவர்சேர்ந் தோருருவாஞ் செழுமலருந் தேனும்போல, மேவியவரிருவருமே நள்ளாதுமுரண்செயில் விளங்குமெய்யுஞ், சீவனுமொன்றோடொன்று போராடியழிந்தொக்குஞ் செப்புங்காலே. (1)

மணியுமொளியும் போலாண் மகனு மனைவியும் பொருந்தி வாழுவாரேற், பிணியுறுமாதுல ரெனினும் பெருஞ்செல்வர் நகுலமும்வெம் பெரும்பாம்பும்போற், றணியாத பகையுற்று நள்ளாரே லுயிரற்ற சவத்தின் மீது, பணிகண்மிகப் பூட்டியலங் கரித்தலொக்கு மவர் செல்வப் பயன்றானம்மா. (2)

தந்தைதாய் சோதரருற் றுரையெலாங் கைவித் துத் தன்னைச்சார்ந்த, பைந்தொடியை யனையவர்போ லாதரிக்கக்கணவனுக்கேபரமாமாதி, யந்தமிலான்முதற் றெய்வம் பதியிரண்டாந்தெய்வமென வன்பினோடு, சிந் தைதனினி னைந்துருகுஞ் சேயிழைபூவையர்க் கெல்லாந் தெய்வமாமால். (3)

தவனுட்டி யிருவரினற் குணமுளா ரிற்றென்னுந் தன்மைநோக்க, னவமணஞ்செய் முன்னன்றிப் பின் னுன்னிற் பயனுளதோ நாவாய்தன்னை, யுவராழிநடுவி னன்றன் றெனக்கைவிடத்தகுமோ வுடல்பன்னோய் சேர்ந், தவயவங்கள் குறைந்தாலு மதையோம்பா தெறிவரோவவனிமீதே. (5)

கொழுநனுயினு மனையாயினு மியல்பில்லாரென் னிற் கூறின்சொல்லாற், செழுமைநெறியினிற்றிருப்ப வேண்டுமிதத்தால்வசமாஞ் சினவிலங்கு, மழல்வதினு ற்றுன்பமிகு மல்லாது பயனுளதோ வருநோயுற்ற, விழிமுசைநன்மருந்திடா தழற்பிறம்பைவிடலந்நோய் விலகுங்கொல்லோ. (5)

தந்தைதாய் சோதரரை நீங்கியின்னொருவன் கை தன்னைப்பற்றிப், பந்தமுறலாலவ ரெல்லாரினு மிக்குரிமை யுளான் பத்தாவன்றோ, விந்தநிலையுணராம லவனையிகல் செயுமேழை யிகபரத்தை, நிந்தையுறவ ழித்தலாற் றன்னைத்தான் கொலை செய்த னிகர்க்கு மாதோ. (6)

பொய்யானநாடகத்திற் பதிமனைபோல் வேடமுற் றோர் பூண்டகன்மஞ், செய்யாரெனக்கிடமாமுகை றிய மணவாளன் றேவியென்ன மெய்யாவுற்றோர் தம்மு ணட்பிலரேற் பிரபஞ்ச விநோதக்கூத்தைக் கையாற் கொண்டாட்டுவிற்கும் பானவரை யழற் புகுத்திக் கா ய்வா னம்மா. (7)

பரவுசமுசாரமெனும் பண்டில்வாழ் வெனும்பொ ருளைப் பரப்பிப்பூண்ட, புரவிகள்போற்காந்தனுங் காந் தையுமமைந்தார் மனமொத் தோர் போக்கைநாடி, விர வொடு மேகாரென்னி னூர்த்தியொடப் பொருள்விளியு ம் விண்புரக்கும், பரமனெனுஞ்சாரதியப் பரிகண்மேற் சினமுற்றுப் படர்செய்வானே. (8)

உறவினரெல்லாங்கூடி மணவிழாச்செய் தரியோ னுரிமையென்னப், பெறலரும்பேர் பெற்றுமொரு வ

ரையொருவர்பேணாரேற் பெருமையென்றே, வறமறி
விலாவெனினும் விடாநற்புற்றுண்பெண்ணு மமைந்து
வாழும், பறவைமிருகங்களைப் பார்த்தாயினு நன்னேய
மன்னோர் பயிலனன்றே. (9)

தாங்குபொருள் சுட்டழித்துத் தானுமழியுங்கன
ல்போற் றலைவனெஞ்சைத், தீங்குகளாற் சுடுமனைவி
தன்வாழ்வைக் கெடுத்தலாற் செழுங்கண்டத்திற்,
றூங்குதிருநாணா லென்னபயனதைக்கழுத்திற் சுரு
க்கிக்கொண்டு, தேங்குமுயிர்ப் பொறைநீக்கிற் பூமக
டன் பெரும்பொறையுந் தீருமன்றே. (10)

அன்னைதந்தை யில்லத்துஞ் சுகமில்லைநமக்குரியா
ளானபின்னர், மனைதாங்கல் சூதகஞ்சூல்சேய்பெருதல்
வளர்த்தலொடு மாமன்மாமி, யினையவரையுபசரித்தல்
விருந்தோம்பனம்பணிக ளியற்றலென்னும், வினைகளி
னா லயர்மனையைப் பரிவுடனாதரவுசெய்ய வேண்டு
நெஞ்சே. (11)

தந்துணைவர் வடிவிலா மூட்வரெனினுந் திருவின்
றணையணைப்பா, மந்தமுளா ரயற்குமரரெனினும்விட
மனையாமருமணாளர், வந்தமுதுண் டுறங்கியபின் று
முண்டு துயின்று முன்னம் வல்லெழுந்து, பந்தமுறுங்
கருமமெலா முடிப்பர்கற்பி னணிபூண்ட படைக்கண்
ணாரே. (12)

வினைப்பகைதீர் பெரியரில்வாழ் வினிற்கலந்து நி
ன்றாலும் வேதநாதன் றனைப்பரவி நினைத்தலென்று
மொழியார்போற் கற்பின்மிக்க தையலார்தம் மனைப்
பணிகள் செய்தாலுந்துயின்றாலுங் கனவினுந்தம் ம

ளர்மாட்டு, நினைப்பொழியார் கணவருட னவர்மன மொன்றாய்க் கலந்துநிற்குமாதோ. (13)

ஏந்தலாந்தந்தையைத் தாய்சகியர் கோயிலைவிட் டோ ரெளியர்சிற்றிற் சார்ந்தனனென் றிகழுமின்னே சிற்றில்லாலவராகே தங்கப்பெற்றேன், சேர்ந்தமிடி யா லவர்தம்பணியாவு மென்கையாற் செய்யப்பெற் றேன், பாந்தவமீதின்றி யெந்தை யன்னையைவே றாக் குநிதி பாழ்த்ததன்றோ. (14)

முதல்வியிவ டுணைவனை தெய்வமென்றா ளவன் சிற்றின் மோக்கமென்று, ளதிலவனோ டுறைதல்சா லோக சாமீபமென்று ளவன்கைதீண்டி, மதமொடுமே யடித்தல் சாரூபசாயுச்சிய மென்றுண் மயற்பேய்கொ ண்டாள், பதவியெலா மீன்றோர்பா லிருக்கநண்பனொடு மெலிந்தாள் பசிநோயுற்றே. (15)

வேறு.

உண்ணல் பூச்சூடனெஞ் சுவத்த லொப்பனை
பண்ண லெல்லாமவர் பார்க்கவே யன்றோ
வண்ணறன் பிரிவினை யறிந்துந்தோழிநீ
மண்ணவந் தனையிது மடமை யாகுமே. 16

கதிரவ னனையதங் கணவரோர் முக
மெதிருற மலருமற் றேதிலார் முக
மதியநோக் கிடவிதழ் வாடிக் கூம்புமால்
சதியர்வாண் முகமெனுஞ் சலசப் பூவரோ. (17)

---

* மண்ணுதல் - அலங்கரித்தல்.

மிடியுளார் கேள்வரென் றுரைத்த மின்னாய்
கடிநகர் சிறுகுடில் காந்தர் வேந்தரா
மடியளே குடியவ ரன்பென் செல்வமாங்
குடியிறையென்னிறை குறையுண்டோசொலாய். (18)

தோழிகே ளெனக்குமோர் துணைவ னுண்டவன்
வாழி தயத்தினான் மற்ற மாதரைப்
பாழினி னினைக்கின்றாய் பாவி நெஞ்சுனக்
காழிசூ ழுலகினி லனந்தமோ சொலாய் (19)

இங்கிரு பொருள்வயி னேகுவை யென்றீர்
தங்குவ துடலொன்றே தளர்நெஞ் சோடுயி
ரங்குறு நாசமே யபலமெய் யிதன்
பங்கதாம் அழியுநும் பங்க தாகுமே. (20)

விரியுல கழியினு மிறைகள் சூழினுஞ்
சுரிகுழற் கற்பினார் துணைவ னேயமும்
பிரிவிலா வாழ்க்கையும் பெறுவ ரேலவர்
பரிவெலா மிரவிமுன பனியி னீங்குமே. (21)

தினவினை செயவகல் செல்வ முன்னந்தூ
தனம்வரு மதினொடு மடைகிலா யெனின்
மனம்வரு முயிர்வரும் வராத மெய்விலங்
கினமுறு வனமுறு மினம் வருந்தவே. (22)

வேறு.

இந்தவுடலுள்ளமைப்பொறி யின்னுயிர்யாவு மண ஞ்செயு, மந்தநன்னாளினி லில்லவட்கன்பொ டளித்த னன்யான்பொதுப், பைந்தொடியே யுனைச்சேர்ந்திடப்

பாரிலெனக் குடல்வேறிலை, சிந்தை புலன்களுநும் வே
றிலை சீவனும்வேறிலை செல்வையே. (23)

வேறு.

அந்தநா ணடந்திலாத யானகன்ற நெடுவழி
யெந்தவாறுசென்றதென்ன வெணையினுவுசி*சிலதிகேள்
பந்தவூர்தி யேறியே படர்ந்தனன் படர்ந்தநான்
வந்தபீழை யாவுமன்பர் *மந்தகாசந் தீர்ந்ததே,

திருவனு யெனப்புகழ்ந்து தேவியை விளிக்கமா
மருமலர் துறந்துநெஞ்சின் வாழ்ந்ததென்ன மழுவண
ளருவமாதை யொப்புரைக்க வழுதுவாடு நங்கையா
முருவமாதர்பெயருரைக்கி னுயிர்துறப்பனெஞ்சமே.

பூணலங்கள் மார்பினுரை யன்றிவேறு புருடரைக்
காணநோக்கி லேனினைந்து கழறநெஞ்சு வாயிலேன்
பாணவேறு பொறியிலேனை நடனம்பார்க்க வரவெனு
நாணமின்றி யேயுரைத்த நண்பர்வம்ப ரேகொலாம். ()

வேறு.

ஓவியர்நீள்சுவரெழுது மோவியத்தைக்கண்ணுறு
வான், றேவியையா மழைத்திடவான் சித்திரமே ஞன்
பூரேன், பாவையர்தம் முருவெனினீர் பார்க்கமனம்
பொறேனென்றுள், காவிவிழி மங்கையிவள் கற்புவெற்
பின் வற்பளதால். (27)

திருவென்ன வென்நினையார் சீர்கேடியென நினைந்து
பொருள்வயினேகிடச்சீவன் போல்வாரே யுன்னுதலா

---

* சிலதி - தோழி. * மந்தகாசம் - புன்னகை.

லொருதரமோ பலதரநீ யோவக்கா ளக்காளென்
றிருவிணையென் றனையழைத்த விழிக்கன் றபங்கினியே.

நள்ளிரவிற் றமயந்தி நளன்றனையே புரிந்தபின்னுந்
தெள்ளுயிர்நீங் கிலளென்னச் சேடிநீ பொய்யுரைத்தா
யுள்ளுயிரே பத்தாவா வுடையகற்பி னுற்கவன்றாள்
றள்ளியகன் றல்வேறு தனியுயிரே தாரையாயே. ()

நரபதிநீ யானலு நண்பரின்பா தத்துகட்குன்
சிரமகுட நிகராமோ சேர்கிலையேற் கொல்வனெனக்
கரவாளையுருவிநின்றாய் கற்பினுக்கோர் குறையின்றித்
தரமாநீ யெனைக்கொல்விற் றந்தைதாய் குருநீயே. ()

அன்பருண்ணி லென்பசியோ மவர்களிக்க யான்களிப்
துன்பமவ ருறில்யாலுந் துன்புறுவே னுதலினு[பேன்
லென்புடல்வேறெனினு மெமக்கின்னுயி ரொன்றென
வறிந்தேன், பின்பவர்தா மென்னைவிட்டுப் பிரிவதெவ்
வா றுரைசகியே, (31)

பொன்னகையிலாயெனச்சொல் பொற்றொடியே பரத்தையர்க்கே, யன்னகைக ளுரியவையா மச்சநாண் மடம் பயிர்ப்பு, மின்னகையாங் கற்பினர்க்கு மேதினியு நீசொலுமப், புன்வகையு நண்பரினோ புன்னகைக்கு நிகராமோ. (32)

செழுமுளரிபுனனீங்கிற் செழுக்குமோபடர்கொடிகள்
கொழுகொம்பைப்பிரியின்வளங்கொண்டுய்யுமோகணவ
ரழுதயரவைதாலு மரந்தைபல வியற்றிடினுந்
தொழுதகுகற் புடையார்தந் துணைவரைவிட் டகல்
வாரோ. (33)

பேதைமதி யுற்றனையென் றெனையிகழும்பெருந் தகையென், காதலியைப் பிரிந்ததிந்தக் காயமொன் றே யுயிருநெஞ்சு, மாதவன்பா லுறையுமன்னுண் மன முயிரென் பாலுரையு, மாதலினான் பேதைமதி யாயின னென் பதுநிசமால். (34)

உரனொடுமா மதுகையினை யுலகமெலாந் துதித் தாலும், பெருமிதங்கொள் ளேமறியாப் பேதையெனு நந்துணைவி, யொருசிரக்கம் பிதஞ்செய்யி னுடலெலாம் பரவசமாம், பருவமதிற் சிறியாளில் வசியமெவண்படித் தனளால். (35)

வே று.

வினையில் வென்றி யிலாதிங்கு மீண்டதற்
கினன் முனிந்திடு மென்றஞ்சிலேம் வசை
தனையு மெண்ணி லந்தாரந் திறலிலே
மெனநகிற் செய்வ தொன்சொ லிதயமே. (36)

இரிஞ ராலுறு மெய்வமுந் தேகமார்
பெரிய புண்களும் பேசருந் துன்பமு
முரிமை வாண்முக நோக்க வொழிதலாற்
பிரியை நோக்கம் பெருமருந் தாமரோ. (37)

எளிலி லாளில் லவளெனும் வேசிதேன்
மொழி முகத்தை மதியைமுன் னொன்முகன்
சுழிதராசினிற் றூக்கத்தட்டோடும்ப
ரெழுநி சாபதி யின்னுமிங் கெய்திலான் (38)

11-ம், அதிகாரம், புருடபாரியல்பு முற்றுப்பெற்றது
ஆக அதிகாரம் 10-க்கு திருவிருத்தம் 140.

12-ம் அதிகாரம்.

விபசாரம்.

பண்டோராண் பெண்ணை மைத்தவ் விருவருக்கு மணமியற்றிப் பரணிரக்கங், கொண்டளித்த முறைகடந்து கள்ளவழிப் புணர்ச்சி செய்யுங் கொடியோர்தம்மை, மண்டலமே வாய்பிளந்து விழுங்காயோ வவர்தலைமேல் வானுலாவுங், கொண்டலே பேரிடியை வீழ்த்தாயோ விதுசெய்யிற் குற்றமூண்டோ. (1)

வேறு.

ஒருவரு மறிகிலா ரெனவோ ரெண்ணுதல்
காவயற் குமரரை கலத்தல் பூசைதன்
னிருவிழி மூடிமற் றெவர்கள் பார்வையுந்
தெரிகிலா தெனப்பயன் றிருட லொக்குமே. (2)

அன்னிய ரெம்மியை பன்றிச் சேர்ந்தன
ரென்ன மின்னிடையவ ரியம்பல் சோரர்கள்
பொன்னையாம்வல்லிலேம் பொருள்வந்தெங்களை
முன்னை வவ்வியதென மொழித லொக்குமே. (3)

மனமகிழ் வாயயன் மைந்தர் தம்மொடுந்
தினமுறை யாடிடுந் தெரிவை கற்பது
புனலுறு முப்பினைப் போலு மெனமெழு
கனலுற லென்னவு மழிவ துண்மையே, (3)

வலதுகை துணைவனு மற்றோர் கைமனை
தலைவன்செய் தொழிலெலாந் தார மாற்றுத
றொலைவிலா வலக்கையின் றொழி விடக்கா
நிலமிசை செய்தன நிந்தை மேவுமே. (5)

உண்டவர் தமைக்கொலு மோத வெவ்விட
மண்டினோர் தமைக்கொலு மாளிகையினூற்
றண்டினோர் தமைக்கொலுஞ் சற்பந் தையலார்
கண்டவர் நினைப்பவர் தமைக்கொள் காளமே. (6)

நிலையில் சிற்றின்பத்தி னேயத் தாற்றின
மலைவுசெய் பவந்தனை யாற்றல் கொள்ளியாற்
றலையினைச் சொறிதலுந் தகிக்குந் தீயினை
யெலியினுக் கஞ்சி யில்விடலு மேய்க்குமே, (7)

மின்னெறி மூட்டிடு விறகுபோற் சுவைக்
கன்னலைப் பழித்தசொல் லாரைக் காணலுந்
துன்னனு முன்னலுஞ் சுடுவெங் காமத்தீ
தன்னையே மூட்டிடுஞ் சமிதை போலுமே. (8)

உணர்வறிஞ் செல்வமு முயர்வு மோறுங்
குணமறுங் குலமறுங் கொடிய நோயெலா
மணவுறு நரகுறு மாயுமோடு மால்
கணமறு மாதர்தோள் கலக்குந் தூர்த்தர்க்கே (9)

வேறு,

உவந்து தன்னுள்ளத் தோங்கிய கற்பிலாச்
சிவந்த வாயுடைச் சேயிழை யைப்பதி
யிவர்ந்து சேமஞ்செய் தெய்வகுதல் பட்டிகள்
கவர்ந்த பின்பொருட் கா லை யொக்குமே. (10)

ஒப்பாரி லுறுந்தெவ்வர் தம்மொடு
மேய்ப்போரி லெதிர்ந்திட வென்றியா
மாயப் போர்செய் மடந்தையர்க் குப்புற
மாயப் பாற்செல வென்றி யமையுமே. (11)

வே று.

கொழுநன்றியி லுயிர்க்கொலையாங் கோவாக்கி
ளையாம் பெரும்பழியா, மழல்சேபா னெஞ்சைச் சுடும்
பயத்தோ டயலாடவரை யொருபேதை, தழுவியின்ப
முறன்மதமா தாலுண்டகல்தா யிடையொழுகுங். க
ழையின்சாற்றை விழைந்ததன்பாற் கடுகிநக்க லேய்
க்குமால். (12)

வே று.

மற்றொருவ னணைச்சேர் மாதிறந்தாலும் வசைநிற்
குமுலகமுள்ளவுஞ், சுற்றமும் வாழ்வுந் துணையுமே
நீங்குஞ் சோரநாயகனுமே மதியான், பெற்ற சந்ததி
யு மிழிவுறுமாண்ட பின்னவியாவெரி நகரஞ், சற்று
நேரங்கொள் சுகத்தினல்விளையுந் தன்மையீ தரிவை
யிருணர்வீர். (13)

வே று.

ஓர்பிழை குருவேசெய்யி னென்பது பிழைகள்செய்ய
நேர்சிறு சீடரென்ன நிதம்பதி பலமின்னூர்தோள்
சேர்வது காணுமில்லா டினம்பலபுருடர்சேர்தல் [தோ
சிரெனவுன்னி யன்னன் செலவுபார்த் திருப்பண்மா

தன்னைப்போற் பிறரைபெண்ண றகுதியான் தா
ன்மணந்த, மின்னைப்போ லிடையினளை விழியினூனே
குவோரைத் தின்னல்போன் முனிவுகொள்வோ ரப
லவன் றேவிதன்னை, யன்னைசேர தரிபோ லெண்ணு
தணைந்திட விரும்பலென்னே.

12-ம், அதிகாரம் விபசார முற்றுப்பெற்றது, ஆக
அதிகாரம் 12-க்கு திருவிருத்தம் 155

13-ம் அதிகாரம்.

உயர்ந்தோர் தாழ்ந்தோரைத் தாங்கல்.

வாழகமும்புனைதூசணியும் பலவாகன மஞ்சமொடுஞ், சூழ்பொருளும் சுவை சேரமுதுங்கமழ் சோலையுமாசுகமுங், கீழ்வராலவர் தாமிலரேன்மிகு கேவல மாயுலகம், பாழதுவாமதனாலொரு டானவர் பாலுறு வாய்மனனே. (1)

வேறு.

நாதனே யுயர்வாந்தந்தை நரரெலா மன்னுன் சேயர், பூதலப் பொருள்கள் யார்க்கும் பொதுமையல்லாதுசொந்தச், சாறனப் பொருள்போற் செப்புச் சாதனம் பெற்றோரில்லை, யாதலிற்றாழ்ந்தோர் தம்மை யருஞ்செல்வர் தாங்கண்மாண்பே. (2)

நயமறைங் கல்வியின்றி நனிநிதியாற் குலத்தால், வயதினாற் பெரியரென்னன் மைந்தர்தந் தையின்றோளேறி, யியலித்தாம் பெரியேரென்ன வியம்பலுங்காலை மாலை, யுயர்நிழ லுள்ளோர்தம்மை யுயர்ந்தவரெனலுமொப்பே. (3)

எலிராட் டினவூசற்க ணேறியே சுற்றுங்காலை,
மேலவர் கீழுங் கீழோர் மேலுமாய்ச் சுழலல்போல,
ஞாலமீ தின்றுயர்ந்தோர் நாளையே வறியராவா,
சீலநெஞ்சினர் கீழோரைச் சினந்திகழார்கண்மாதோ.

மக்கள்யாவரு மோரன்னை வயிற்றிடை யுதித்தலாலிற், சக்கராந்தனி லெல்லோருஞ் சகோதர ராவர்

சீரின் மிக்கவர் தாழ்ந்தோ ரென்னல் வெறும்பொய் யா மென்மையென்ப, தொக்கவே பிறப்பிறப்பி னுறுங் கொலே வுரையாய் நெஞ்சே. (5)

* சிலதரு நரரேயங்கஞ் சீவனெஞ்சவர்க்குமுண் டா, நலநவை யின்பதுன்ப நானிலத்துளவர்க்கு, நில மிசை யவரைச்செய்தோ னித்தனேயவரையேதும், புல னிலாப் பொருள்போ லெள்ளும் புல்லர் வீட்டில்லர் மாதோ. (6)

கொற்றவர் நரர்க்குழைத்துக் கூலியா மிறையக் கொள்வர், மற்றவரெவருந்தம்மெய் வருந்தவே யுழைப் யர்செல்வம், பெற்றவர்களு முழைப்பார் பின்னவர்க் குழைப்பர்சேட, ருற்றவித்தன்மையுன்னி னுழையரார் தலைவராரே. (7)

உடலுறுப்புகண்மேல்கீழென் றுன்னிடா தோம் பல்போலுந், தடமலைகொண்டநீரைத் தாழ்தரைக்களித் தல்போலுந், தொடர்புறுமேலோர் தங்கைத்தோய்கிதி யாவுந்தாழ்ந்தோர்க், கிடவெனக் கடவுளீந்தா னென நினைந் திடுவர்மாதோ. (8)

என்றுமெய் வருந்தவேலை யியற்றுவோர்க் குயர்ந் தோர்சொற்பப், பொன்றனை யீவர்செட்டுப் புரிகின்ற வணிகரென்ன, வொன்றுகொண் டொன்றையீவோ ருழையரிற்று முயர்ந்தோ, ரென்றுகொள் ளெண்ணந் தின்னா வென்னலெவ்வண்ணமம்மா. (9)

ஒளிமுடி யொடும்பிறந்தே யுலகமாண்டவருமில்லை யெளியரா யோடொன் றேந்தி யிங்குதித்தவருமில்லை

---

* சிலதர் - ஏவல்செய்வோர்.

குளிர்கட லுடுத்தபாரிற் குறைந்தவர் மேலோரென்
னல், வெளிமயக் கன்றிச்சுற்று மெய்யலவுணவாய்
நெஞ்சே. (10)

13-ம் அதிகாரம்.

உயர்ந்தோர் தாழ்ந்தோரைத் தாங்கல்

முற்றுப்பெற்றது, ஆக அதிகாரம் 13-க்குத்

திருவிருத்தம், 165.

6-ம் அதிகாரம்

தாழ்ந்தோருயர்ந்தோர்க்கடங்கல்.

விரிசுடர்க்கதி ரோன்மதிதாரகை விலங்குபக்கி
மரமலையாவினும், பெரிதுசின்னதென் றுகியதன்மை
போற்பிழையிலான்வகுத் திட்டவுலகிய, நிரிதலின்றி
நடப்பதற்காகவே சிறியற்மேலவ ரென்னவிங்காயினு,
ருரியவிம்முறையின் படிதாழ்ந்தவ ருயர்ந்தவர்க்குள்
ளடங்க லொழுக்கமே. (1)

14-ம் அதிகாரம்.

தாழ்ந்தோ ருயர்ந்தோர்க்கடங்கல் முற்றுப்பெற்றது.
ஆக, அதிகாரம் 14-க்குத் திருவிருத்தம் 166.

76960

15-ம் அதிகாரம்

பொய்.

முன்னமோர் பொய்யுரைக்க வப்பொய்வெளியா காமன் மூடும்வண்ணம், பின்னுமோர் பொய்யுரைக்க வதையுநிலை நிறுத்தவோர் பெரும்பொய்சொல்ல. வின்னவகை கைதவமொன்றிருநூறு கைதவத்துக்கிடமாம் வாய்மை தன்னைமுன்பகிற் சங்கடமொன் றிலையது வேதனைகமை நெஞ்சே. (1)

இழுதைசொல்லி மறைக்கலா மெனுந்திடத்தாற் பாதங்களெல்லாந்தீயர், பொழுதெலாம் புரிதலாற் குற்றங்கள் யாவுக்கும் பொய்பிதாவாம், வழுதொன்றை நீக்கிகுற்றீவினைகளெலா நீங்கிடுநல்வண்மையொன்றே, முழுதுமுண ரறிஞர்க்குத் தோழனு மவர்க்கதனை மோசமுண்டோ. (2)

அங்கதமே பொருளென்னக் கைக்கொண்டோர் மறந்தொருமெய் யறைந்திட்டாலு, மிங்கதனை யெவரு நம்பார் துணைவியர் புத்திரர்தமரு மிகழ்ச்சிசெய்வா ரங்கணுல கெங்கணுமே வசையாகு நரரெலா மகிதரா வார் பங்கமுறும் பொய்யரைப்பொய்யறுஞ் சேரார்தம் முளமும் பழிக்குமன்றோ.. (3)

ஏதேனும் பயன்வேண்டிப் பொய்சொல்வி னப்பொய்தானெவ்விதத்து, மாதரையில்வெளியாகு மப்பொழுதப் பயனழியும்வளருந்துன்பஞ் சாதலின்மை வேண்டிவிட முண்ணலொக்கும் பயன்கருதிச்சலமு

ரைத்த, லாதலினு னுண்மைத்தனைத் துணைக்கொள்ளி னெப்பயனு மடைவோ நெஞ்சே. (4)

மெய்யரெனப் பெயர்பூண்டார் வறிஞரே யெனி னுநிதி மிகவுமன்னார், கையதனிற் கொடுத்துவைக்க வெவரு மஞ்சார் பொய்யரெனக் கவ்வைபூண்டார், செய் யபொருண் மிகவுளா ரெனினுமவர் கையிலொரு செல் லாக்காசு, மையமின்றியொருவர்கொடா ரெனிற்படி றின்றன்மைதனை யறைவதென்னே. (5)

விலங்குபறவையினு நேர்வாக்கொன்றாற் சிறப் புடையர் விளங்குந்திண்மை, யிலங்குவாயா லுரையாத வத்தமுரைப் போருலக மிகழ்விலங்கின் குலங்களினுங் கடையராஞ்சாணமதை யமுதுவைக்குங் கோலச் செம் பொற், கலங்களின் வைத்தலையொக்குமெய்க் குரியவா யாற்போய் கழறலன்றே (6)

பழியிலாரொருவர்க்குமஞ்சாது நேர்வழியே படர் வார்வவ்வுந், தொழிலுளார பகற்கஞ்சுந் * துரிஞ்சில் போ லிட்டிகையிற் றொடர்ந்துசெல்வா, ரிழிவுளாரென் பதற்குப் பொய்த்தலே சான்றாகுமேசிறாய, வழியுளா ரென்பதற்குச் சரதமேசாட்சியா மகியின்கண்ணே. (7)

அயலர்செய் குற்றங்கள் கூறுமன் மறைதலேயற மாமன்னர், துவருறு வண்ணநாம் பொய்த்தாலும்பிழை யன்று சொந்தமாவோர், பயன்வேண்டிச்சிறியதோர் பொய் சொலினும்பெரும்பழியாம் பார்மேல்கீழா,

* துரிஞ்சில் - வௌவால்.

யயர்வாகப்புரண்டாலும் பிறர்க்கின்னாதரும்பொய்மை யறையனெஞ்சே. (8)

பாரினிற் பொய்த்திடல் பொய்க்க வுன்னுதல் பொய்யினைப் பிறர்க்கும் பயிற்றல்யாதோர், காரியஞ் செய்வேனென்னச்சொல்லித்தவிர்த றனக்கேலாக்கரு மந்தன்னை, வீரியமாய்ச்செய்வனென லற்பமையே துதித்தல்பொய்மை வியந்துகொள்ளல் சீரியரையிகழ்தல் பிறர்மீதொருவன் சொல்லும்பழியைச் செவியிற் கோடல். (9)

தற்புகழ்தல் புறங்கூறன் மிக * விருணம்வாங்குதல் பொய்ச்சான்றுரைத்தல், பற்பலவாக்கட்சாடை சிரகரம்பிதஞ்செய்து பசுமைபொய்போற், பிற்பயன்றேன்றிடச்செய்தன்மெய்யுரைக்க வஞ்சிவாய்பேசிடாமற், சற்பனையாயிருத்தல் பொய்க்கதை கூறல்கேட்டலெலாஞ் சலங்களாமே. (10)

வியனுலகெங்கணும் வீற்றிருக்குமோர்
வயமுள்ளான் முனிவிற்கஞ்சாது மாக்கட்குப்
பயமொடுமெநுத்தமே பகர்தறேவினுங்
கயவுளார் நரரெனக்கருதல்போலுமே. (11)

15-ம் அதிகாரம்.

பொய் முற்றுப்பெற்றது.

ஆக அதிகாரம் 15-க்குத் திருவிருத்தம் 177.

---

* இருணம் - கடன்.

16-ம் அதிகாரம்.

க ள வு.

களவுசெய்குதன் மனத்தினி னினைக்குதல் கவரென்
றுளமகிழ்ந் துபதேசித்த லுதவிசெய் தொழுகல்
வளமிலாப் பொருண் மாறுதல் மிருவினைவாங்க
லளவினுந் நிறைதனினும் வஞ்சித்தபகரித்தல். (1)

கண்டெடுத்த வோர்பொருளனுபவித்தலுங் களவின்; பண்டம் வாங்கலும் வாங்கியகடன் கொடாப்பழியு, மண்டும் வண்பொருளாசை யாற்பொய் வழக்கிடலுந் தொண்டுசெய்பவர் கூலியைக் குறைக்கின்ற தொழிலும். (2)

நட்டமே பிறர்க்கெய்திடச்செய்தலு நம்பி
யிட்டார்வைத்த நற்பொருளபகரித்தலு மிறப்ப
வட்டம் வட்டிகள்வாங்கலுஞ் சூதிற்பொன்பெறலு
மிட்டவேலை செய்யாதுகைக் கூலிகொள்ளியல்பும். (3)

கன்னம்வைத்தல் செல்லாப்பணம் வழங்குதல்கள்ள
மன்னுசீட்டை யுண்டாக்குதல் கைலஞ்சம்வாங்க
லென்னும்யாவுமே களவதாமித்தொழிற் கியைவோர்
மன்னராக்கினை வசைநரகடைந்து வாடுவரால். (4)

இலகவானுதற் றவியைச் சேயரைப் பிரிந்து
கலகமென்னவே வியாவிசெய்மா விலங்குகாற்பூண்டில்
வுலகமேசிடச் சிறையகத் துற்றுமண் சுமந்து
சிலுகெலாமுறல் சிறிதுபொன் றிருடலாலன்றோ. (5)

தள்ளரும் பெரும்பழியுளாரென்னினுந் தரையி
லெள்ளல்சே ரிழிகுலத்தரே யென்னினுமேசிக்
கள்ளரென் றவர்ப்பழித்திடப் பொருளெனிற் களவிற்
குள்ளபோரவ மானத்தை யுரைப்பதென் னுளமே. (6)

வேறு.

அரிமுழ நுழைதல்போல வயலகம் புகும்போதச்சம், பொருடிருடும் போதச்சம் புறப்பட்டேகுங்காலச்சந், தெருவினி லெவர்க்குமச்சங் கவர்ந்தன திளைக்கவச்ச, முருமுருக்கொண்டுகள்வருளங்குடிகொண்ட போலும். (7)

நிரந்தரம் பலநோயுற்று நெடிதயரினுங் கையேந்த, யிரந்துணைப் பெருகிரப்பே யெய்தினும் பகரவொண்ணு, வாந்தை சூழினும்பொன் வவ்வுமத்தொழிற்கியையா வண்ணம், வரந்தரவேண்டுமென்னக் கடவுளை வருந்தாய் நெஞ்சே. (8)

16-ம் அதிகாரம்.

களவு முற்றுப்பெற்றது.

ஆக அதிகாரம் 16-க்குத் திருவிருத்தம் 185.

17-ம் அதிகாரம்.

கொலை.

உயிரினை வதைத்திடல் வதைக்க உன்னுத
லயிலெனக் கொடியசொல் லறைதலெற்றல்வெண்
டயிருடை மத்தெனத் * தாபம் பல்புரித்
தயலவ ராயுளைட் கழிவுண்டாக்குதல். (1)

---

* தாபம் - துன்பம்.

கருவினை யழிக்குதல் கயமிங் கோனையார்
மருவிட விரும்புதன் மற்றன் ஞேரிட
பொருவிட வகைசெயா தொழிதல் வெவ்விடஞ்
* சருவிணி விடர்கொடுஞ் சமர்க்குடன்படல். (2)

முனைவுகட் காமம்வெம் முரண்முதற்கொலை
வினையினுக் கேதுவாம் வினைக் கடைந்திடன்
மனையினிற் றீயிடன் மண்ணிற்றக்கொல
வினைய யாவுங்கொலை யென்னும் வேதமே. (3)

பெறலரு முயிர்தரும் பிறப்பிலானதை
யறவொரு வழிசெய தாண்மை பூண்டனன்
பறவையை நார்விலங் கினைப்படுக்குமோர்
மறவனுக்குலகெலா மறவியென்பவே. (4)

கொலைபுரிவோரையுங் குடி வருந்தவே
யலைவுசெய்பவரையு மாவி நீக்கிடத்
தலைமுடிதரித்தவர் தமக்குநீதியா
மிலைகொலை செயுமுறை †யிதர ரார்க்குமே. (5)

சுதமுறு முகத்தொடு சொல்லு மாற்றமும்
பதமுறு ‡ கறைக்கதை படிந்தவாடையும்
§ வதனையே காட்டலால் வதைமறைக்குத
னுதயனைக் காத்திறன் மறைத்தலொக்குமே. (6)

பவமறமாயினும் || பவர்க்க முத்தியாய்ச்
சிவமுறப் பொலியினுஞ் சிதைந்தழிந்தவோர்

---

* சரு - சோறு. † இதரர் - அன்னியர். ‡ கறை - இரத்தம்.
§ வதன் - கொலை, || பவர்க்கம் - நரகம்.

சவமுயிர் மேவினுந் தகையில்காதக
ரவனியி லுயர்ந்திட லறிதுநெஞ்சமே. (7)

பத்தினிசேயரும் பரிசனங்களுந்
தத்தமநிலைகெடத் தலைவனைச்சம
னொத்தவ னியிற்கொல லொருவன் றன்னையன்
றத்தனை பேரையு மடுதல் போலுமே, (8)

தீயிடை மூழ்கினோன் சிங்கியுண்டவன்
மாய்விலா தூய்யினும் வதனுய் யானம
னுயதன் றொழில்புரி வோனையன்போடு
மேயதன் னுலகினுக் கீண்டழைக்குமே. (9)

சிவனை வதைசெயல் சிறந்த தாயுங்காற்
பாவமோ ரைந்தினுங் கொலைசெய் பாவியைப்
பூவலயம் பொறு தெரியும் பூதிதா
னுவென வாய்திறந் தவனை நுங்குமே (20)

17-ம், அதிகாரம்.

கொலை முற்றுப்பெற்றது.

ஆக, அதிகாரம் 17-க்குத் திருவிருத்தம். 195

18-ம் அதிகாரம்.

மது.

ஞானமெய்ச் சுகம்புகழ் நலம்பெறத்தனந்
தானமே செய்குவர் தகுதியோரறி

வீனமெய் மறதிநோ யிழிவுறப் பொருள்
வாளென வழங்குதர் மதுவுண்போர்களே. (1)

மருந்தனோர் மதுவுண்போர் மாண்ட பாண்மையா
லருந்தவப் பாலருக் கப்ப னில்லையால்
பொருந்திய மனைபவள் பூண்டநாண் களத்
திருந்ததே யென்னினு மிழந்ததொக்குமே. (2)

சித்தமு மவகமாஞ் செயல் விகற்பமா
நித்தமு மரணமா நெடிய துன்பமா
மத்தமு நாசமா மவிழ்த மின்மையாற்
பித்தினு நஞ்சினும் பெரிது கள்ளரோ. (3)

பாவினைத் தேனையின் பாகை நீததுவெண்
மாவிதை மாந்துவோர் மலர்க்கணீத்து மெய்த்
தோவிரணந்தனைச் சூதகந்தனைக்
கோவியுண் டெவக்குமீக கூட்ட மொப்பரே. (4)

சீயென விகழ்தரு தேனுண் போர்களை
நாயெனக் * கோகென வாக்குநாடொறு
மாயினை மகளையில் லாக்குந் தாண்கொண்ட
சேயிழை யையும் விலைசெயச் செய்யுமால். (5)

மலர்தனை யமுதென மாந்தச் செய்திடு
மலர்தரூ வெனவன லள்ளச் செய்யும்வெஞ்
சலந்தரும் பகைவர்கை தனக்குள் ளாக்குநன்
னலந்தனை யழித்திடு நறவு நெஞ்சமே. (6)

அலருற வீயெறும் பரவுதேனொடும்
பலவிலங் கணுகுறப் படுத்தபாயலின்

---

* கோகு - கழுதை.

மலசல வாந்தியு மயக்குங் கோடலா
னிலமதி னரகமா நிதங்கள் ருண்பார்க்கே. (7)

கொஞ்சமுஞ் சுவையிலே குளத்தைதக்கோணியே
நஞ்செனை துகர்வர்மெல் நலியழுப்புற
விஞ்சியவாவதீ வினைகள் யாவுமே
குஞ்சுகள் கள்ளெனுங் கொடிய பக்கிக்கே. (8)

வே று.

வருமையாற் களவு செய்வா மையலாற் காமத்
தாழ்வர், குறுமைசேர் பகையினல்வெவ் கொலைசெய்
வர் வசையினேடுஞ், சிறுமைதங் துயிரிருந்துஞ் செத்
தவராக்கியிம்மை, மறுமையை யழிக்குங்களோ மறந்த
லெப்பயன் வேட்டம்மா. (9)

வே று.

நரிநாய் பறவைசூழ வழிநடுவிற் கிடந்தசவமதனை
யுரியாரிலரென் றிடுகாட்டுக் குடன்கொண்டேகிக் கட்
டையில்வைத், தெரியா நின்றேன் பிணம்விழித்திக்
தின்றேன்மயக்கென் றியம்பிமெய்கொ, னரியை யவிக்கு
முன்னமெழுந்தயற்கட் கடையுட் புகுந்ததுவே. (10)

18 - ம், அதிகாரம்,

மது, முற்றுப்பெற்றது.

ஆக, அதிகாரம் 18-க்குத் திருவிருத்தம் 205.

19-ம் அதிகாரம்.

சூது.

வித்தமேமிகுமென வெஃகிச் சூதினி
லத்தமா ரத்தமுமழித்த நீட்டிய
சித்திர மாதெழி னம்பிச்சேர்ந்ததற்
பத்தினி தனையகல் பான்மை யொக்குமே (1)

வையமேன் மானிடர் வாழுநாட்சில
வையமில் கேள்விதானளவி லாருயி
ருய்யகல்வினைகளை யுஞற்றிடாது நாள்
பொய்யமர் சூதினிற் போக்கல் புன்மையே (2)

ஓதரு விசையொடு மோடு நாளெண
மேதையர் தந்தொழில் விடாது செய்குவர்
போது நீட்டித்தெனப் பொறியிலாரதைச்
சூதெனும் வாள்கொடு துணிக்கநேர்வரே. (3)

வளமலி நிடதநா டளிக்குமாண்புசேர்
நளனையு மலைவுசெய் நாசச்சூதுதான்
களவுபொய் சினம்பகை காமமியாவையு
மளவறப் பயிற்றிடு மையன்போலுமே. (4)

கவறினை யாடுவோன் காக்கை வீயினுஞ்
சவமதிவ் வழிசெலு மென்று தானெழா
னவன்புனை தாலிபந் தயத்துக் காமென
வுவகை பூத்தாடுவா னுயர்வு றுனரோ. (5)

வேறு.

வட்டமானில மீதுமன்னூர் விட
மிட்டபாலை யினிதளித் தாலெனக்
கட்டமேவுங் கழகத்தில் வென்றுகொ
ளொட்டங் கையினி லொட்ட மளிக்குமால் (6)

* இவறலேதந் திழிவையுந் தந்துபின்
றிவறியாமையுந் தந்து நெஞ்சந்தனைக்
கவறென்னேவிக் கலக்கங் கொடுத்தலாற்
கவறெனும் பெயர் காரண நாமமே. (7)

19-ம், அதிகாரம்.

சூது முற்றுப்பெற்றது.

ஆக அதிகாரம் - 19-க்குத் திருவிருத்தம்-212

20-ம் அதிகாரம்.

பரிதானம்.

வலியினாலி லஞ்சங்கொள் மாந்தர் பாற்சென்று
மெலியவர் வழக்கினை விளம்பல் வாடிய
வெலிகண் மார்ச்சாலத்தி னிடத்து மாக்கள்வெம்
புலியிடத்துஞ் சரண் புகுதலொக்குமே. (1)

அல்லினிற் கள்வுசெய்பவரை வெஞ்சிறை
யில்லிடும் பண்பினுக்கிசைந்த மாக்களே
யெல்லினி லெவரையு மேய்த்துவவ்வலாற்
கொல்லினும் போதுமோ கொடியர் தம்மையே. (2)

* இறவல் ஆசை.

கொலைஞருஞ் சோரருங் கொடிய வஞ்சரு
நிலைபெற வவர்கையி னிதியைக்கொண்டுதன்
னலைகடலுலகிய லழிக்குந் தீயர்பான்
மலையெனப் பாவமும் பழியு மண்டுமே, (3)

பயிரினை வேலிதான் மேய்ந்த பான்மைபோற்
செயிருற நீதியைச் சிதைத்தோர் தீயன்சாண்
வயிறினை வளர்த்திட வாங்கு மாகிகி
வெயிலுறு வெண்ணெய்போல் விரியுமுண்மையே. (4)

ஆசையால் வாங்கிடு மவனை யீந்தவர்
கேசமா மதிப்பரக்கீணன் சென்னிதம்
மாசன மரக்குவ ரடிமை நானெனச்
சாசன மவர்க்கவன் றந்ததென்னவே. (5)

காசதி கந்தனைக் கருதிவா தந்தீர்த்
தேசுற வேண்மைகட் கிடர்செய் வேன்றன
மீசரங் குறைவுபா ராதுமேவிடுந்
தாசியரினு மிழி தகவுளானன்றே. (6)

எனதுன தெனவொரு பொருட்கிரண்டுபேர்
சினமொடு வாதித்தோர் தீயன்பாற்செலிற்
றனதென வப்பொரு டனைக்கொள் வானவர்
மனதொரு மித்ததை வகிர்தன் மாண்பரோ. (7)

பசியறு மெளியரோர் பகலிரப்பினு
* மசியுறு மெங்கணு மாக்கமுள்ளவர்
நிசிபகல் பலரிட நிதமுமேற்கின்ற
வசையினைச் சொல்லவோர் வாயும் போதுமோ. (8)

---

* அசி - அவமதிச்சிரிப்பு.

பெற்றவன் கைப்பொருள் பிள்ளைக் கேயலான்
மற்றவர்க்கில்லையெனன் மனுவி நீதியாங்
குற்றமே விடாதிதி கோடிபேர் கையிற்
பற்றுவோ னவர்க்கெலாம் பாலன்போலுமே. (9)

வே று.

மண்டலீகன்றன் றண்டனை நரகவமானங்
கண்டபேர்க்கெலாம் பயம்பெரும் பகையொடுகவ்வை
பண்டமிவ்வகை யீட்டலி னனுதினம் பலரை
யண்டிமானமாத் தொண்டுசெய் துயிருயலழகே, (10)

வே று.

இருவரிடத்தும் விவாதநிதிக் கிரட்டிகொள்வர் தகாதென்னி, னருமைசய மென்பார்தோல்வி யடைந்தோன் றந்தநிதிகேட்பின், வெருவவவன்மேற் பொய் வழக்கை மெய்போற்கற்பித் திடரிழைத்துச், சருவ கொள்ளை யடிப்பர்பரி தானம்வாங்கும் பாதகரே. 11)

20-ம் அதிகாரம்.

பரிதானம் முற்றுப்பெற்றது.

ஆக அதிகாரம் 20-க்கு திருவிருத்தம் 224.

21-ம் அதிகாரம்.

புறங்கூறல்.

சம்பாபினை மிடுவனஞ் சாருந் துர்மணம்
பூம்பொழில் பரிமளம் பொருந்து நாறிடுந்

தாம்பழி யுளராலாற் றகுதியோர் பிறர்
நோம்படி யவர்குறை நுவலுவார்களோ. (1)

நலத்தின் மிக்கார்சொலார் நயமில் சொல்லையே
சொலத்தகாப் பழிபிறர் மீது சொல்லுவோன்
குலத்தினு நலத்தினுங் குறையுளானெனத்
தலத்தவன் வாய்மொழி சாட்சியாகுமே. (2)

உள்ளவங் கணங்களிற் றோடல்போலொளி
கள்ளநெஞ்சினன் புறங்கழற லன்னவ
னுள்ளமார்புறைமெலா மொழுகி வாய்வழி
வெள்ளமாய் வழிகின்ற விதத்தைமானுமே. (3)

இன்னலே யேதிலார்க் கிழைக்கு மச்சொலே
முன்னமெய் யென்னினு முழுப்பொய் போலுமா
மன்னவர் குறையினை யறிந்துமின்றெனப்
பன்னுபொய் மெய்யினும் பாடுடைத்தரோ (4)

வேறு.

ஆட்சியா மூல கரசன்முன்
சாட்சிசொல் சுமயத்தலான்
மாட்சியோர் பிறர் மறுவினை
நீட்சியா நிகழ்த்தார்களே. (5)

மதியிலார் செய்வடுவவ
ரெதிரி னின்றியம்பினு
* முதுகினின்று மொழிவரோ
விதியுணர்ந்த விபுதரே. (6)

* முதுகு - புறம்.

ஒருவனொருவன் குறையையுரைத்திடவேயதைக் கேட்டோர், பெருகபத்தங்கலந்து பலபேர்க்குரைக்க விவ்வாறே,மருவியெங்கும் பரவுதலான் மண்ணின்முன் னந் தூறுமவன், * குருநோயொப்பானவனைக் கோ னூர்விட் டகற்றனன்றே. (7)

21-ம், அதிகாரம்,

புறங்கூறல், முற்றுப்பெற்றது.

ஆக அதிகாரம் 21-க்கு திருவிருத்தம் 230.

22-ம் அதிகாரம்.

பெரியோரைத்தூறல்.

அரியகுணஞ்சேர் பெரியர்தமக் கமையக்கடல்சூழ் புவனமெங்கும், விரியுமிசைமா சுறவவர்மேல் விளம் பும்பொய்ச்சொ ல்ண்டமிசை, திரியும்பானுக் கிரணமு தைத் திரட்டிப்பற்றி யதன்மீது, கரியைப்பூச வேண்டு மெனக் கருதுந்தன்மை பொருவுமால். (1)

காற்றினெதிரே நின்றொருவன் காறியுமிழு முச் சிட்ட, மாற்றியவன்மேல் வந்துவிழும் வாறுபோ லித் தாரணியிற், றோற்றியொழியும் வாழ்வதனைத் துறந்த மேலோர் மீதொருவன், றூற்றிக்கூறும் வசைச்சொற் கள் சொன்னோன்மீதே தோயுமால். (2)

---

* குரு - வருத்தம்.

கடலனலுற் றெரிந்ததென்றுங் கதிர்குளிர்சோ யுற்றதென்றுந், தடவரையே சாய்ந்ததென்றுஞ் சாற்றுமொழி நம்புவரார், திடமுடைய சான்றோர்மேற் செப்புமவ தூறதனைப், விடவிமிசை வாழறிஞர் பொய்யெனவே தள்ளுவரால். (3)

வாய்மைக்கு நோயினர்க்கே மாமதுவுங் கைப்பாகுங், காய்வெயிலு மஞ்சணிறங் காமாலைக் கண்ணருக்கே. சாய்நிழலுஞ் சுடுவெயிலாந் தாபச்சுரத்தினர்க்கே, தீயவர்க்குந் தூயவருந்தீயவர்போற் றோன்றுவரே. (4)

கஞ்சனத்திற் றம்முகமே காணுவதுபோற் கயவர், தஞ்செயிரைப் பிறர்செயிர்போற் றுமெண்ணித் தூறுவரோர், வஞ்சகனை நம்பியொரு மாசிலா னின்னலொடு, மெஞ்சலுறு வண்ணமவ னிழிவுரைத்தன் முறையாமே. (5)

22-ம் அதிகாரம்

பெரியோரைத்தூறல் முற்றுப்பெற்றது.

ஆக, அதிகாரம் 22-க்குத் திருவிருத்தம் 236.

---

23 - அதிகாரம்.

உலோபம்.

பொன்னினைப் புதைத்திடப்புவியைத் தோண்டுவோன்
றன்னிடந் தொட்டமண் டனையிழுத்தலா

னுன்னுடை யதுநிதி யுலகமேயிம்ம
னொன்னுடை யதுவென வியம்பலொக்குமே. (1)

பொன்னை மாநிலத்தில் யான் புதைக்குமெல்லைவயி
னன்னையே யனையபா ரருளி னோக்கிநற்
சொன்னமென் வாயிடைச் சொரியு முன்றன்வாய்க்
கென்னையே யிடுவனென் றிசைத்திடாளரோ. (2)

பொலிவளர் தங்கிய புவியிற் றூனுண்டும்
பலிபிறர்க்கிட்டுமே யன்றவ் வான்பொருள்
வலியிலாப் பேடிகை வாள்கொலாமென
வலியினை மேவிய * வரம்பையே கொலோ (3)

நித்திய மனுபவி யாது நீணிதி
பத்திரஞ் செய்குவோன் பாரந்தாங்கவூர்
மத்தியிற்புதைத்தகன் மாசி றாசர்க்கு
வத்திரஞ் சுமக்கும்வா லேபமொப்பனே. (4)

செல்லவோர் போக்கின்றிச் செறிந்தநீர்கண
வில்லமே யழித்தெழுந்தேகல் போற்செல
வில்லையென்றடைத்தபொன் னெழுந்துதன்னைக்கொள்
புல்லரைக் குடிகெடுத் தகன்றுபோகுமே. (5)

வேம்புதேனீயுமோ வெயிறண்ணுகுமோ
பாம்பமுதளிக்குமோ பரிவில் பூரியர்
தாம்பொதியாளெனத் தாங்கும் பொன்னினைத
தேம்புமா துலர்க்குளஞ் சிறந்தளிப்பரோ. (6)

ஈகையில்லாது பொன்னீட்டுவோன் கொண்ட
தோகையு மைந்தருந் தொலைவிலானென

---

* அரம்பை - தெய்வப்பெண்

வோகையா யருவிட முணவிவிட்டவன்
சாகையே கருதிமா தவஞ்செய்வார்களே. (7)

வேறு.

அனுவமமொன்றே பொன்னலாயநற் பயனக்கி ன்றேற், புனலிலாத் தடக்கைப்பெய்யாப் புயலினைப் பொருவுமப்பொன், றினமுமே நுகர்தலின்றி * தீனர்க்கும் வழங்கலின்றித், தனமதைக் காத்தனச்சுத்தரு விளைக் காத்தல்போலாம். (8)

வேறு.

மெலியுமேழைக் கிடாமல் விளைபொன்னை
மலியுஞ்செல்வர்க்கு வாரி வழங்குத
லிலியிலார்க்கரு ணன்மருந் தும்பெரு
கொலிகடற் பெய்யுறை யையுமொக்குமே. (9)

வனவிலங்கும்விண் வாழ் § பக்கியுந்தந்த
மினமோடன்றி யெடாதிரை யேழைகட்
கனமிடாது தம்மாகம தொன்றையே
மனமுவந்து வளர்ப்பர் கயவரே. (10)

வேறு,

தானற்கனி சிந்தாதுயர் தருவைச்சிலைகழியா
லூனப்பட மோதிப்பழ முதிர்ப்பாரெனவுலகிற்
றீனர்க்கு வழங்காதுறை தீயன்பசியுளரான்
மானத்தை யிழந்தேபொருள் வவ்வப்படுவானே. (1)

---

* தீனர் - யாசிப்போர். § பக்கி - பறவை.

சாங்காலையோர் பிசின்னன்பொருட்டனஞ்செய வுன் னித், தேங்கான்மொழி மனைமைந்தரை வினிதானவர் தெரிந்தே, யாங்காயவனுரையாவித மவன்மேல்விழுந்தழுதார், தாங்காதவ னுயுர்தீர்ந்தனன் றனம்போற்பகையுளதோ. (12)

23-ம் அதிகாரம்.

உலோபம் முற்றுப்பெற்றது.

ஆக அதிகாரம் 23-க்குத் திருவிருத்தம் 247.

24-ம் அதிகாரம்.

சோம்பல்.

சிற்றெறும் பாதியாச் சீவகோடிகண்
முற்றுமெய் யுழைத்துயிர்முறையிற் காக்குமால்
சற்றுமெய் யசைவிலாச் சழக்கரா நயி
ரற்றவோர் சவங்கொன்மற் றசரமேகொலோ, (1)

விடக்குறுஞ் சடம்பல வேலைசெய்தற்கா
நடக்கவு மோடவு நனியுறுப்புகண்
மடக்கவுநீட்டவும் வாய்ந்ததாற் சும்மா
கிடக்குமெய்ச் சோம்புளோர் கேடுளார்களே. (2)

தெளிவுற நூல்பல தினமும் வாசித்து
மிளிருடல் வருந்தியும் வெறுக்கையீட்டிநற்

கிளிமொழி மனைவியைக் கிளிஞரைப்பல
வெளியரைத் தாங்குவோர்க்கில்லை மந்தமே. (3)

வே று.

மடிசேரு மவர்க்கொருநாளு * மறல்
விடியாதவர் நெஞ்சிடை வெந்துயரே
குடியாரு மறந்தொடர் குற்றமெலா
நெடிதாக வளர்ந்திடு நிச்சயமே. (4)

வே று.

பாரெல்லாமாள் வேந்தருநூறோர் பண்போருஞ்
சீரெல்லாஞ்சூழ் செல்வருமந்தஞ் சேராரே
நேரில்லாமா பாதகர்தீனர் நெடுஞ்சோர
மூரெல்லாஞ்செய் துய்பவர்மாசேரம் புடையாரால் ()

எய்யாவம்பே வல்விசைமாறி யிறுமென்று
மொய்யாவிரத மாழியொடுங்கெட் டொழியுந்தம்
மெய்யானதுவே வியர்வையுறப் பல்வினைகையாற்
செய்யாதவரே நோய்பலவுற்றுத் தெய்வாரே. (6)

24-ம் அதிகாரம்.

சோம்பல் முற்றுப்பெற்றது,

ஆக அதிகாரம் 24-க்குத் திருவிருத்தம். 253.

---

* மறல்-தரித்திரம்.

25-ம் அதிகாரம்.

சினம்.

வலியரைச் சினப்போர் வரையினின் மோது மட்கலமென வுடைந்தழிவார். பொலிவுறத் தமையொப்பவர்களைச் சினப்போர் புலியிரண் டொன்றையொன்றடித்து, மெலிவொடிரண்டுங் கெடுதல்போற் கெடுவார் மெலியரை வெகுளுவோர் வேங்கை, யெலியினையெதிர்த்த தன்மைபோ லிழிவுற்றெரிநாகிடையமிழ்ந்துவரே (1)

வேறு.

எம்மையுந் தெரியாம லிச்சினம் வந்ததென்பி [ப்பி
ரும்மைநோய் செயும்வலியரை வெகுண்டிடா தொளி
ரிம்மைவாழ்விலா வெளியர்பாற் றினமுமக்[illegible]தும்
வெம்மைநீ ரறிந்தோவறி யாமலோ விளம்பீர், (2)

கணைசிவந்திட மெய்யெலா நடுங்கிடக் காலான்
மண்சிதைந்திட வுதைத்துநாக் கடித்திதழ்மடக்கி
யெண்சிதைந்திடச் சினங்கொள்வீர் நும்மெயோடிதயம்
புண்சுமந்த தலாற்பிறர்க் கென்குறை புகல்வீர். (3)

* கோடவாண் முகஞ்சுழித்திகழ் மடித்தெழில் குலையச், சேடன்மீதியான் சினமுற்ற பொழுதெதிர் திகழு, மாடிநோக்க யானியான் கொன்மற் றூர்கொலென் றயிர்த்துத், தேடிநோக்கவோர் குரூபமேகண்டிலந் திகைத்தேன். (4)

* கோடல்-கோணல்.

சினமுளோன் மனைமைந்தர்க ளவன்வெளிச் செல்லுந்
தினமெலாந்திரு விழவுகொண் டாடுவர்செல்லா
தினையன் றங்குநா ளிழவுகொண்டாடுவ ரிறப்பின்
மனையிலோர்பெரு மணவிழா வந்தெனமகிழ்வார் (5)

நாளு நாங்கொளுந் துயர்க்கெலாங் காணநாடின்
மூளுஞ்சீற்றத்தின் விளைவதாமுனி வகமுடையோர
தேளும்பாம்பும் வெஞ் சினவிலங்கினங்களு நனிவாழ்ந்
தாளுங் கானில்வாழ் பவரெனத்தினமரு ளடைவார்.

தழையுஞ் செல்வத்துட் பிறந்துநல்லோரவை சார்ந்து
பிழையி லாலெலா முணர்ந்துநீ வைகலும் பிழைத்தா
யிழையுந் தினராய்ப் பிறந்து கற்றிடவகை யில்லா
வுழையர் செய்பிழைக் காமுனிந்தனையி தென்னுளமே.

வே று.

* பைதலே யெய்தலாதிப் பரன்மெய்ய லமப்பைதல்
செய்தவர் தமைச்சினத்தல் சினவாா தன்மேற்கல்லைப்
பெய்தவன் றனைவிட்டக்கல் பிளந்திடப்பொர லுங்கை
யா‡லெய்தவன் றனைவிட்டம்பை முனிதலு மெய்க்கு
மாலோ. (8)

25-ம். அதிகாரம்.

சினம், முற்றுப்பெற்றது.

ஆக அதிகாரம் 25-க்குத் திருவிருத்தம். 261.

* பைதல் - துன்பம்.

26-ம். அதிகாரம்.

பொறுமை.

மாங்கனி வாயிற்கல்வி மாத்திடை யிருக்குமந்தி,
யாங்கார்நீர் நிழலைவேறோர் பழமுணுங் குரங்கென்றெ
ண்ணித். தாங்கரு மவாவிற்றாவிச் சலத்திடை யிறந்த
தொப்ப, நீங்கரும் பொறுமையுள்ளோர் நிலத்திடைக்
கெடுவர்நெஞ்சே.

தாரணியி லெவரேனுந் துயருறிற் றன்றலையின்
முடிதரித்த தொப்பாஞ், சீரணியுஞ்செல்வமவர் படை
க்கிற் றன்றாய்மனை சேய்செத்த தொப்பாங், காரண
மே யொன்றுமின்றிச் சுகதுக்கந் தன்வலியார் கணத்
துச்குள்ளே, பூரணமா வாக்கிடுவோன் பொறுமையு
ளோ னன்றியெவர் புவியின்கண்ணே,

வவ்விடலே முதலாய வினையாலொவ்வோர் பயன்
கைவந்துகூடு, மவ்வினைகளியற்ற வெவ்வே றிடங்கரு
விசமயமும் வந்தமையவேண்டு, மெவ்விடத்து மெப்
பொழுது மொழியாமலெரியென்ன விதயந்தன்னைக்,
கல்வியுண் ணு மவ்வியத்தாற் கடுகளவு பயனுளதோ
கருதுங்காலே.

ஆண்டெலாம்பிற ராக்கநோக்கியே
மீண்டு மீண்டுகெட் டுயிர்ப்புவீங்கினுந்

தாண்டியவர்தனந் தாழ்த்துன்கைமிசை
யீண்டுசேருமோ விதயமேசொலாய்.

மக்கள் பலருளார் மகிவிசாலமாம்
பக்கமவர்தினம் படைப்பரோர்கல
மொக்கவதுபொறு துள்ளைந்திடிற்
றுக்கமோயுமோ சொல்லெனெஞ்சமே. (5)

நிறையுநீர்க்கசை வில்லைநீணிலத்
தறையுங்கல்வியி லறிவின்மேன்மையிற்
குறையுளார்க்கலாற் கோதின்மாண்பினோர்க்
கிறையுமவ்விய மி-லையில்லையே (6)

அறமுளார்கள்போ லறிஞர்போற்புகழ்
பெறவருந்துதல் பொருமையாயினும்
புறமுளார்கள்போற் பொருளிலேமென
வுறுமவ்வுறுகணே யுறுகணீயுமே. (7)

வேறு.

பூட்டுமரிகண்டம் புனைந்தழுங்கு வார்போலுந்
தோட்டியினைத்தானே சுமந்துகெடுங்கயம்போலும்
வாட்டுந்துயர்கள்பல வையமிசையிருக்கக்
கோட்டமுளோர்வேறு குலந்தமக்குண்டாக்குவரே.

26-ம் அதிகாரம்,

பொறுமை முற்றுப்பெற்றது.

ஆக அதிகாரம், 26-க்குத் திருவிருத்தம் 263.

26-ம் அதிகாரம்.
வித்தியாகர்வம்.

என்னநீவருந்திக் கவிபாடினுமெடுத்த கற்பனை முன்னோர், சொன்னதேயலாதுதனமொன்றிலைத்தொன்மை நூல்பலவாகு, முன்னர்நூலெலாந் தந்தவனியலை முற்றுணர்ந் தனையல்லை. புன்னின்மிக்கவர் பலருளார் கல்வியாலுள்ளமே செருக்கென்னே. (1)

வே று.

பருத்திவிதைத்தெடுத்து நூலாக்கி யாடைபண்ணி யளித்தாலுடுத்தல்பாரமாமோ, திருத்திமண்ணிற் செந்நெல்விதைத்தரிசியாக்கித்தீஞ்சோறட்டூட்டி லுண்ணச் செய்வாய்நோமோ, வருத்தமொடுமிலக்கணங்களிலக்கியங்களியநூல் பலமுன்னோ ரளித்திலரேல், கருத்தேயந்நூல்கள்சில கற்றுணர்ந்து கவிசொல்லல் வியப்பன்று கர்வமென்னே. (2)

வே று.

இயலொடுதமிழ்மூன்று மெள்ளவுந்தேரா
பயர்வறுகலைஞான மறுபதினான்கும்
பயனுறத்தேர்வாரே பலருளரவர்முன்னீ
வெயிலின்முன்னிடுதீபமின்மினியானெஞ்சே. (3)

27-ம் அதிகாரம்.

வித்தியாகர்வம் முற்றுப்பெற்றது
ஆக அதிகாரம் 27-க்கு திருவிருத்தம். 272

28-ம் அதிகாரம்.

அழகாற் செருக்கல்.

எழிலுளேனெனச் செருக்குறுநெஞ்சமே யிழைதுகினீத்தங்கங், கழுவிடாதுறநோக்குதி முகந்தனைக் கஞ்சனந்தனினோக்கி, னெழுநிலத்திடை யுன்னின் மிக்காருளரெனவறியாயிமைத், தழியும்வெண்டலை யுன்றலைபோலிருந் தவணுற்றதறிவாயே. (1)

வேறு.

தோற்போர்வை துறந்திறந்து கிடந்தவழகியைக் காணக் சுடலைசென்றோங், கோற்போன்ற வெள்ளன் பின் குவையொன்றே கண்டனஞ்செங் குமுதவாயு, நூற்போன்ற விடையுமன நடையுமணி தனமுமதி நுதலும்வாய்ந்த, சேற்போன்ற விழியும்பான் மொழியுங்காணுமலுளந்திகைத்தோ மன்றே. (2)

நோக்கதனிற் பீளையிரு செவிகளிலுங் குறும்பியன நுகர்வாயெச்சின், மூக்கதனிற்சளி தலையிற்பேன் வெயர்வை மலசலங்கண் முழுநாற்றம், போக்க வொருநாட்கழுவா விடிலழுக்கு மிகத்திரண்டு புழுததுநாறு, மாக்கமிலாத்தேகமிதை யழகென்னச் செருக்கலறியாமையாமே. (3)

வேறு.

கட்புலன்றனையே கவர்ந்திடுகவினுளே மெனவனுந்தினம், பெட்புறப்புவிற் செருக்குதல பெருமை

யன்றொளிர்பேருட, லுட்புறத்தினையே திருப்பிடிலோங் கலா மலக்காடுசூழ், மட்புறச்சுவர் தீட்டுசித்திரமானு நம்மெழிநெஞ்சமே. (5)

வே று.

மண்ணிறசெய்பாவைமீது வயங்குபொற்பூச்சோ தண்பூங், கண்ணியை * மாற்றிற்சூடுங் காட்சியோ பழம்பாண்டத்திற், பண்ணியகோலமோநற்பண்பொடு ஞானங்கல்வி, புண்ணிய மேதுமில்லான் பூண்டபே ரெழிலுடம்பே. (5)

25 - ம், அதிகாரம்,

அழகாற்செருக்கல், முற்றுப்பெற்றது.

ஆக அதிகாரம் 28-க்குத் திருவிருத்தம் 277.

29-ம் அதிகாரம்.

செல்வச் செருக்கு.

மணிகள்பல வகைக்கல்லாம் பொன்முதலு லோகமின்னு மண்ணுங்கட்டி, துணிபட்டாடைகள் பருத்திநூல் பூச்சிக்குடர் நாயின் றேலுரோம, மணி புழுகுகத்தூரிமுதலிய பூனையின் மலம்பாலாவிரத்தங், தணிவிறேன் வண்டெச் சிலிவைசெல்வ மெனச்செருக் கறகுமோநெஞ்சே. (1)

---

* மாறு - துடைப்பம்.

செங்கல்வெண்கல் கருங்கல்லை நவமணிகளெனச் செல்வர் சேர்ப்பார்யாமுஞ், செங்கல்வெண்கள் கருங் கல்லைச்சேர்த்திட்டோ மிருவர்கல்லுஞ் சீர்தூக்குங்கா, னங்கல்லே யிடையதிக மெங்கணுமுண் டெதிர்ப்போரை நாசஞ்செய்யும், பங்கமுறச் செல்வர் நம்மினமிக் கோரென் றகங்கரிக்கும் பான்மையென்னே. (2)

வேறு.

இடையிற் கோவணமுமின்றி யிங்குதித்தோ மவ்வாறே, கடையினில் வெறுங்கையோடெவ் கழிகுவ நடுவிற்சேரு, முடைமையாற் பெருமையென்றே வூர்க்கெலாம் பொதிசுமக்கும், விடைதருக் குற்றதென்ன வீண்செருக் குற்றாய் நெஞ்சே. (3)

சுழல்சகடக்கால் போலுந் தோன்றியே யழிமின் போலு, மழன்மன வேசைபோலு மருநிதி மேவிநீங் கும், பழமைபோ லதனைநம்பிப் பழிபுறச் செருக்கன் மேக, நிழலினை நம்பிக்கைக்கொ னெடுங்குடை நீத்த லொப்பே. (4)

வேறு.

தரித்திரந் தரித்திர மென்னுந் தாரணி
சிரித்திடச் செல்வமே செல்வமென்னுமிச்
சரித்திர முணர்ந்துமே தரையிற் பொன்னெமக்
குரித்தெனச் செருக்குத லூரனன் றுள்ளமே. (5)

நாசமாங் காலமே நண்ணு முன்னிற
சேலுக் கெய்தலு மிரியு முன்னமே
தேசது மிகுத்தொளிர் தீபம்போலவு
நீசர்தஞ்செருக்கினு னிதி யிழப்பரே. (6)

வேறு.

செழித்திடு நாளினிற் செருக்குற்றாய்
கழித்துனை மாநிதிகை நீங்கிற்
பழித்திடு முலகின் முன் பரிவின்றி
விழித்திட லெப்படி வினெஞ்சே. (7)

29-ம் அதிகாரம்.

செல்வச்செருக்கு முற்றுப்பெற்றது.

ஆக அதிகாரம் 29-க்குத் திருவிருத்தம் 284.

30-ம் அதிகாரம்.

தீயரைச்சேராமை.

செழுமல ரிடைமது சிறையளி நுகரு
முழுவிட மதுபெறு முனிவுடை யரவம்
பழுதறு மறநிலை பயிலுவர் சிலரே
வழுவய லவரிட மருவுவர் பலரே. (1)

வேறு.

மணமனை சேர்மண மாலை மாண்புறும்
பிணவனத் தாரிழி வெய்தும் பெற்றியார்
கணமதிற் சேர்ந்தவர் கனங்கொண் டோங்குவர்
குணமிலா ரினமுறல் குறையுண்டாக்குமே. (2)

மண்ணியல் பாற்குண மாறுந் தன்புனல்
கண்ணிய பொருண்மணங் கலந்து வீசுங்கால்
புண்ணிய ராதலும் புல்ல ராதலு
நண்ணினத் தியல்பென நவில லின்மையே, (3)

பாரினிற் பிறந்தபோ தெவரும் பண்பினார்
பூரியரெனப் பெயர் பூண்ட தில்லையாற்
சீரிய ரென்னலுந் தீயரென்னலுஞ்
சேரினத் தியல்பினாற் சேர்ந்தகாமமே, (4)

கயவரைச் சேர்ந்தவன் கலந்தபோ தவர்
செயவினையெள் ளுநவன் றினஞ்செலச்செல
மயன்மிகுந் தவர்செயன் மகிழ்ந்த னுட்டிப்ப
* னியவரைச் சேர்தல்போ லில்லைத் தீமையே. (5)

30-ம் அதிகாரம்.

தீயரைச்சேராமை முற்றுப்பெற்றது.

ஆக, அதிகாரம் 30-க்குத் திருவிருத்தம் 289.

31-ம் அதிகாரம்

பிழை பொறுத்தல்.

எப்பிழையா னீபிறரைச் சினந்தவர்க்கின் னாச்செய்ய வெண்ணினையோ, வப்பிழை நீ செய்திலையோ வுன்னைப்போ லவர்பிழைக்க லாகாதோமா, வெப்பமுற

---

* இயவர் - கீழ்மக்கள்.

நாணிலேயோ நீயொருவன் பிழை செய்யவின்வேந்த ன்கை, யொப்பமிட னதிகாரம் பெற்றனேயோ மனமே நீ யுரைசெய்வாயே (1)

பிழையிலான் கடவுளன்றி மக்களிற் றப்பில்லா தார் பிறருமுண்டோ, மழையினுமே யசனியுண்டு மதிக்குமோர் மறுவுண்டு மலர்க்கு முள்ளாங், கழையி னுமே சக்கையுண்டு கனியினுந் தோல்கொட்டை யு ண்டு கதிக்குங்காம, விழைவுறுன் மறம்புரித னளர்க் கியல்பாதலின்வரை வெறுக்கொணாதே. (2)

நாவையே கடித்ததெனப் பற்றகர்க்கும் பேருள ரோ நடக்கும்வேளை, பூவையீ்ய பொருவுகழல் சருக்கி யதென் றதைக்களைவோர் புவியு ளுண்டோ, காவை யாருலகமெனும் பேருடலினவயவம்போற் கலந்தசீ வர், தாவையேசெய்யினு மிக்கறிவுடையோர் கமை செய்த றகுதியாமால். (3)

உனையொருவ ரிகழ்ந்தனரே லேதுக்கா விகழ்ந் தனரென் றுன்னியுன்பாற்,றினையளவுதப்புளதே லதை நீக்காய் தப்பின்றேற் சினமுறாதே. கனைகழையை வேம்பென்னிற் கழைக்குமோர் குறையுண்டோ கல் லின்மோதித், தனையுடைப்போர்க் குணவுதருந் தேங் காய்போ லெவர்க்குநன்மை தனைச்செய் நெஞ்சே.

தீதொருவர் செய்தனரென் றதற்கெதிராய் நீயவ ர்க்கோர் தீங்குசெய்யிற், சாதுநீயவர் தீயரென்பதற் குக் கரியென்ன சக்கிலாதா, ரோதவிட முண்ணின் விழியுடையாரு முண்ணுவரோவுலப்பில் செந்நெல், சேதமுறவவைத்தடுவோர்க் குணவாதல் போனலமே செய்வாய்நெஞ்சே. (5)

நல்லவர் தீயவரென்று தெவ்வரையுமேபுவிதாங்கு கனிநீர்நல்குஞ், செல்லருணை னொளிபரப்புங் கால்வீச மந்தாமுஞ்சேருமோப்பொன், றில்லாதான் றீயவர்க்கா விரங்கிமனு வேடமுற்று னெனிலன்னூர்பாற், செல்லா துன் சினமனமே பொறுமையே பெருமையன்றோ செப்புங்காலே. (6

இன்னலெமக் கிழைத்ததனால் வீடிழந்து நரகாள் வா ரெனநினைந்து, பன்னரிய பெரியர்பிழை பொறுப் பர்பொறூர் தம்பிழையைப் பரமனூற்றுன், முன்னொரு வன் செய்தனனென்றவனுக்குச் செயுமிடாம் முறை யிலான்சேய், பன்னிதமரையுஞ்சேரு மவர்நமக்கெப் பிழைசெய்தார் பகராய்நெஞ்சே. (7)

31-ம் அதிகாரம், பிழைபொறுத்தல் முற்றுப்பெற்றது.

ஆக, அதிகாரம் 31-க்குத் திருவிருத்தம் 296.

32-ம், அதிகாரம்.

இனியசொற்கூறல்.

வட்டவுல கெட்டுமிசை மட்டற நிரப்பும்
வெட்டவரு துட்டரை விலக்கிவச மாக்கு
நட்டமிலை யெட்டனையு நட்டு நரரெல்லா
மிட்டமுறு கட்டுதவு மின்மொழிய தன்றோ. (1)

இக்குவல யக்கனிழி வுக்கிடம தாகும்
பக்கமொடு மக்கள்பகை புக்கவழி பண்ணுங்

துக்கமும் விளைக்குமொரு துக்கமும் விளைக்குந்
துக்கனை நிகர்க்குமவர் கக்குமிழி கூற்றே. (2)

சந்தனிலை செப்பிறைவை சாவமுளதென்னக்
கந்தமதெவர்க்குநனி காட்டிவிடல் போலு
கிந்தனையு ளாரினிய நீர்மையின ரென்ன
முந்தவவர் வாய்மொழி மொழிந்துவிடு மன்றோ (3)

நன்மை புரியார்களு நயந்தவிர் கொடுஞ்சொல்
லின்மையெனி னல்லவ ரெனப்புகழ் படைப்பா
ரின்மைபுரி யார்களும் வழங்குமுறை தீதேற்
புன்மையுறு தீயரென வெள்ளுமுயர் பூவே. (4)

வன்மொழி யுரைக்கினெதிர் வன்மொழி கிடைக்கு
மின்மொழி யுரைக்கினவரு மின்மொழி யெமக்கு
நன்மொழிகளேபல விருக்க நவிலாமற்
புன்மொழி யுரைப்பவர்கள் பூரியர்களன்றோ. (5)

32-ம், அதிகாரம் இனியசொற்கூறல் முற்றுப்பெற்றது
ஆக, அதிகாரம், 32-க்குத் திருவிருத்தம் 301.

33-ம், அதிகாரம்.

பிறர்க்குத் தீங்குசெய்யாமை.

விடதரம் பற்றிவே றொருவன் மேனிடு
மடலுளோன் றன்னைமுன் னதுகடித்தல்போ
விடர்பிறர்க் கிழைத்திடு மவன் றன்னைமுன்
மிடலொடு மவ்விடர் மேவிச் சாடுமே. (1)

படியின் மானிடர்மிகு பண்புளோ ரலாற்
கொடியரை நரரெனக் கூறல் பாரெலா
மிடியெனக் கொலைத்தொழி லியற்றுந் தீவெடிப்
பொடியினை மருந்தெனப் புகல லொக்குமே. (2)

உரவுநீர்க் கருங்கட லுடுத்த பார்மிசைப்
பரர்வருந் திடவிடர் பண்ணு வோன் றனை
நரரெலாம் பகைசெய்வர் நண்ணு மாயிர
மரவுசூழ் கின்றவோர் தேரை யாவனே. (3)

வே று.

கயலிற் பாய்சிரல் கால்சிக்கிக் கொண்டெழ
வயமிலா துயிர் பாய்கின்ற தன்மைபோ
லயல வர்க்கழி வாகவோ ரந்தீங்
செய நினைத்தவர்க் கேவந்து சேருமே. (4)

வே று.

* புயகமதைத் தேள்புலி யைப் பொல்லாத விலங்கையெலா, மயர்வாக வடித்தோட்ட லவைகள் குணத்தாலன்றே, வியல்பின்றி யெந்நாளு மேதிலார்க் கிடரிழைக்குங், கயவனையே வைதடித்துக் காழேட்ட னன்றுமே. (5)

33-ம், அதிகாரம், பிறர்க்குத்தீங்குசெய்யாமை,
முற்றுப்பெற்றது, ஆக, அதிகாரம் 33-க்குத்
திருவிருத்தம், 306,

---

* புயகம் - பாம்பு.

34-ம். அதிகாரம்.

நெடுந்துயில்.

விடியலிற்பறவை மிருகம்யாவுமுன் விரைந்தெழுந்து பலவினைசெயுங், கடிமலர்ப்பொழில்கண் மலருமார்வமொடு கடிலெழுந்துகளை தாவிடும், படியின் மன்னுயி ரெலாமெழுந்து தொழில் பலவியற்றிட வெழுமாலே, தடியெனத்துயிலு வோனரன்கொலொருதா வரங்கொலறி யேமரோ. (1)

வே று.

தங்கருமங்கள்செய்யத் தனிப்பகல்போதாதென்ன
விங்கறிவுடையோர்தூங்கா ரிரவுனுமூடர்துஞ்சக்
கங்குலும்போதாதென்னப் பகலுங்கண்படுவர்யாவும்
புங்கமாத்தேர்ந்துவேறோர்புரையிலார்போலுமாதோ.

வானுலா மருணனென்னு மக்களாயுளின் கணக்கன் றானெழு முன்னெழாமைச் சகத்திரக் கரத்தாற் றொட்டு, மேனெனவெழார் வாழ்நாளை யெண்குறைத் தெழுதிக்கொள்வா, னதுகண்டுகால னவரிடமணுகுவானே, (3)

34-ம், அதிகாரம்,

நெடுந்துயில் முற்றுப்பெற்றது.

ஆக அதிகாரம் 34-க்குத் திருவிருத்தம். 309.

35-ம், அதிகாரம்.

பேருண்டி.

கனிநிழல்புனல்கொள்பைங்கூழ்நாசமாமிகவேயுண்ணு
மினியமாமருந்துநஞ்சா மின்பமு மிகிற்றுன்பாகும்
பனிபிணியடைமைமந்தம் பழியெலாம்வம்மினென்னக்
கனிவொடுமழைக்குந்தூதாங்கழியபேருண்டிமாதே.

35-ம், அதிகாரம்.

பேருண்டி முற்றுப்பெற்றது.

ஆக அதிகாரம் 35-க்கு திருவிருத்தம் 310.

36-ம் அதிகாரம்.

தற்புகழ்.

சடமதைக்கழுவவுன்னிச்சகதியிற்றோய்தல் போ லுஞ், சுடரினைத்தூண்டவேண்டி நூதியேதொலைத்தல் போலு, மடமையாற்றன்னைத்தானே புகழுவோன்வ சைகளெல்லாம், புடவியே யெடுத்துரைக்கப் பூணு வனிந்தையம்மா, (1)

வேறு.

தற்புகழ்வோன்றனைப் பழிக்குந்தாரணி
சொற்புகழ் விரும்பிடான் றனைத்துதித்திடு

நற்புகழ்பெறுவழி நன்னடைக்கையோ
டற்பமுந்தற்புக ழாமையாகுமே,

36 - அதிகாரம்.

தற்புகழ், முற்றுப்பெற்றது,

ஆக, அதிகாரம், 32-க்குத் திருவிருத்தம், 3112.

37-ம் அதிகாரம்

புகழுமிகழு மதியாமை.

தன்றுணையிலானேயுள்ளத் தன்மையையறிவான் பூமி, யின்றொருவனைத்துதிக்கு மேசிடுமவனைப்பின்னு, நன்றினைத்தீதென்றுன்னுந்தீதைநன்றென்ன வுன்னும் பொன்றுமா னிடர்புகழ்ச்சி புனலின்மே லெழுத்துக் கொப்பே. (1)

வசையுமீக்கூற்றுமற்றோர் வாய்வருவாயுவல்லாற், பகையுளதோ வக்காற்றைப் பாரிலோர்பொருளென் றெண்ணி, யிசையினான்மகிழ்வும்பேசுமிகழ்வினாற்றுய ருமுற்று, நசையினாற்கொல்லுநெஞ்ச நஞ்சமேயொக்கு மாதோ. (2)

சுணங்கனோர்பாற்குரைக்குஞ் சூழ்காங்கத்துமோ ர்பாற், பிணங்கியேபுள்ளொலிக்கும் பெரும்பறையோர் பாலார்க்கு, மிணங்கியிவ்வொலிகளெல்லாமேற்கின்றசெ

வியோர்தீயன் குணங்கெடக்கூறும்வன்சொற் கொண்டிடிற்குறையென்னெஞ்சே.

37-ம் அதிகாரம்.

புகழுமிகழுமதியாமை, முற்றுப்பெற்றது.

ஆக, அதிகாரம் 38-க்குத் திருவிருத்தம் 3115.

38-ம் அதிகாரம்.

ப ரோ ப கா ர ம்.

அனமிலார்க்கனமாய்வாழ வகமிலார்க்ககமாய்த் துன்ப, மனமுளார்க்குவப்பாய்நோயின்வருந்துவோர்க் கருமருந்தாய்த், தனமிலார்க்கரும் பொன்னாய் நற்றாய் தந்தையிலார்க் கன்னரா, யினமிலார்க் கினமாயார்க்கும் யாவுமாயிசைதலன்பே. (1)

அருந்தவே கூழும்பூண வாடையும் வீடுமின்றி, வருந்துவோ ரெண்ணிலார்நம் மருங்குளாரெனவறிந்தும், விருந்திடாய்மணிமாடத்து மேவிநீயொருவன்வாழப், பொருந்தினாய் மனமேமக்கட் போலிநீவிலங்கானாயே, (2)

ஏவல்செய்வோர்க்குக்கூலி யிடைத்துகிலுணவாம்யாமோர், காவலனெனினுஞ்சோறு கலையென்றியொன்றுங்காணே, மாவலாய்பொருளீயீட்டி யயலவர்க்காச்சுமந்தோ, மீவதைமேற்கொண்டேமே விணையில் வீட்டைடவோநெஞ்சே. (3)

சாந்தமார்வறியர்போலத்தற்பரன் வருவானாவெ ன், றேந்துகைவீடுகொள்ளென்றேந்துகையாமக்கையி, னீந்தபொன் விலைபோல்வீட்டுக் கிட்டபொன்னுமன் னுரைக், காய்ந்திலையென்போர்வேண்டோங் கதியென் பார்போலுமாதோ. (4)

இரவலர்தம்மையெள்ளு மேழைகாளி யம்பக்கே ளீர், நரகமோக்கத்தைவிற்க நண்ணியவணிகரன்னார், பரகதிவ்வரைத்தாங்கும்பண்பினார்க்கீவ * ரள்ளல், கர வுளார்க்கீவரென்னி னவர்கதைகழறலென்னே, (5)

பிறர்புகழினைக்கைம்மாற்றைப் பேணியோ யுதவி செய்வோ, ரறமுளாரல்லர்நித்த னருட்குமேயருகால் லர், திறவலக் கறஞ்செய் நன்றைத் திகழிடக் கரங்கா ணாமல், வறியர்பாத் திரமறிந்து வழங்குவோர் மாட்சி யோரே. (6)

மக்கடம் பொறையைத்தாங்கு மகிக்குமன்னுரைக் காக்க, விக்கநீர் பொழியாநின்ற விண்முகிலினிக்குஞ் செய்யத், தக்கவோ ரெதிர்நன்றுண்டோ சமயத்தோர் பயனும் வேண்டா, தொக்கவே செய்தநன்றி யுலகினும் பெரிதாமாதோ. (7)

மன்னிய கனிகாய்நீழன் மற்றெல்லாமுதவிப் பின் னுந் தன்னையு முதவாநின்ற தருவெனத் தங்கையார் ந்த, பொன்னெலா முதவிப்பின்னும் பூட்சியா லுழைத் திட்டேனு, மின்னுயிருதவியேனு மிடுக்கண்டீர்ப்பார் நல்லோரே. (8)

---

* அள்ளல் - நரகம்.

வேறு.

நூனுழைத்த நுவலருஞ் சீலர்தம்,
பானுழைந்த படர்மதி யார்பிறர்,
கானுழைந்த கடுவுந்தங் கண்ணின்வை,
வேனுழைந்தென முன்னி யிறைப்பரே, (9)

புறம் வருந்திடப் பூதவுடம்பினை,
மறவுடம்பை வளர்ப்ப ரறிவிலா,
ருறவிடும்பை யுருவண்ண மீந்துநல்,
லறவுடம்பை வளர்ப்ப ரறிஞரே, (10)

ஓடியெங்கு முலரும்பைங் கூழ்களை,
நாடிமைமுகி னன்மழைபெய்தல்போல்,
வாடினையும் வறிஞரிருக்கையைத்,
தேடிமேலவர் செய்வருதவியே, (11)

காரிடத் திரந் தேனுங்கயநதி,
நீரினைப்பணை யெங்குநிறைத்தல்போ,
லாரிடத்திரந் தேனு மறமுளார்,
பாரிடத்துப் பகுப்பர் வறிஞர்க்கே, (12)

வேறு,

சாடுவெங் கோடையைத் தலையிற் றாங்கியு
மாடுநீளார்க் கருநிழல் வழங்குமாலெனக்
கேடுதம் பான்மிகக் கிளைக்கினுங் குணப்
பீடுளோர் நன்மையே பிறர்க்குச் செய்வரால் (13)

இதமிலா வுலோபர்தம் பொருளை யெண்ணியே
மதமொடு நாடொறு மகிழ்வர் மேலவர்

பதவிதீர் மிடியர்க்குப் பரிவிற் றுஞ்செயு
முதவியை யுனுந்தொறு முளங் களிப்பரே. (14)

காமமே யின்பங்கள் கணத்தி னீங்கிப்பின்
றீமையே விளைத்திடும் பிறர்க்குச் செய்கின்ற
சேமநல் லுதவியாற் சேரு மின்பந்தா
னீமவீட்டின்பென நிகருமற்றதே. (15)

38-ம் அதிகாரம்.

பரோபகாரம் முற்றுப்பெற்றது.

ஆக, அதிகாரம் 38-க்குத் திருவிருத்தம் 3130

39-ம் அதிகாரம்.

பொருளாசை யொழித்தல்.

என்பொரு ளென்பொருளென்று சீவன்விடுமனமே யொன்றியம்பக்கேளா, யுன்பொருளானு லதன்மே லுன்னுமம் வரைந்துளதோ வுன்றனோடு, முன்பிறந்து வளர்ந்ததோ வினையுனைவிட்டகலாதோ முதிர்ந்து நீ தான், பின்பிறக்கும் போததுவுங் கூடவிறந்திடுங் கொல்லோ பேசுவாயே. (1)

ஒப்பருநற் குணத்தவர்க்குங் கொலைகாமங்கட்களை யையுபதேசிக்கு, மப்பனுப்பேயர்குட் பகைவிளைக் குஞ் சத்துருவாயகிலத்துற்ற செப்பரிய துயர்க்கெல்லா மாதாவாய்த் தீவினைக்கோர் செவிலியாய விப்பொருளை நற்பொருளென் றெப்படி நீயொப்புகின்று யேழை நெஞ்சே. (2)

நோக்கிருந்து மந்தகராக் காதிருந்துஞ்செவிடரா நோயில்லாத, வாக்கிருந்து மூங்கையரா மதியிருந்து மில்லாரா வளருங்கைகாற், போக்கிருந்து முடவரா வுயிரிருந்துமில்லாத பூட்சியரா, வாக்குமிந்தத் தன மதனை யாக்கமென நினைத்தனை யகக்குரங்கே. (3)

நிறைசெல்வ முடையாரை நோய்துன்ப மணுகா தோ நினைத்ததெல்லாங், குறையின்றிப் பெறுவரோ புவிக்கரசு செலுத்துவரோ குறித்தவாயுள், பிறையெ ன்னவளருமோ வியமன்வரவஞ்சுவனோ பேரின்பத்துக் குறையுளோ, வவர்கிரக மீதெலா மனமேநீ யுன்னு வாயே. (4)

கனவதனிற் கண்டபொருள் செலவுக்காமோ குனிக்குங்கற்கூத்தி, னரமைச்ச ரெனவேடம் புனைந் தவர்தம் மாணையெங்கு மேகுமோவிண், கனமின்போ லொழியுமிந்தப்புவிவாழ்வு நிலையென்னக் கருதிக்கோடி நினைவுற்று யுடல்வீழினென்செய்வா யறிவில்லா நெஞ் சக்கல்லே. (5)

பஞ்சபூதங்களை விண்டாரகையைத்தண்மதியைப் பானுதன்னைக், கொஞ்சமுநம் பொருளெனவுன் னுமல் வெள்ளிபொன்னெனுமட் குப்பைதன்னைத், தஞ்சமாம் பொருளென்ன நினைத்ததன்மை லாசையுற்றுத் தயங்கு கின்றாய், நெஞ்சமேயுனைப்போலுமறிவீனர்தேடினுமிந் நிலத்திலுண்டோ, (6)

பூதலநம் மில்லம்வானமேற்புந்தர் சசிகதிர்மீன் பொற்றீபங்கள், சீதநீர்க்கடம் விருட்சாதிகணம் பூம் பொழி லுலகின்செல்வமெல்லாம், வீதமா நமதுமக்கள்

யாவருநஞ் சுற்றமெனவியத்துன்னுமற், பேதஞ்செய் துழல்கின்றாய் நெஞ்சமே யுனைப்போலும் பித்த ருண் டோ. (7)

பூதமதி னென்னுநமைத் தாங்குந்தா யொன்று நாம் புசிக்குமுண்டி, மாதரையி லொன்றுநஞ்சமையலா ளொன்றெமக்கு வளச்சாந்தாற்றி, பேதமின்றி மற் றொன்று நாமூரும் வாகனமாம் பின்னுமாதி, நாதனை தந்தையெனிற் செல்வமிது போலுமுண்டோ நவிலாய் நெஞ்சே. (8)

மண்டுபெருந்தனமிருந்துங்கண்டுமகிழுவதல்லான் மயல்போன்முற்று, முண்டுவிட வொண்ணுமோ நினை விற்கும் பஞ்சமோ வுலகந்தன்னிற், கண்டபொருளத் தனையு நமதுசெல்வாப் பொருளைக் காத்தெமக்குத் தொண்டுசெய்வோ ரெனவுன்னி மகிழ்வுற்றாடற்போ மோ சொல்லாய்நெஞ்சே. (9)

எத்தனைபேர் கையின்முன் மிப்பொருடானிருந்த தவ ரெல்லாந்தத்த மத்தமெனதம்பிறு ரவர்களைவிட் டகன்றன்கையமர்ந்ததின்னுஞ், சத்தமின்றியுனைமோ சஞ் செய்தனந்தம் போகரத்திற் சாருஞ்சொன்னேன், சித்தமேயதுசெல்லு முன்னீசற் பாத்திரத்திற் செல விடாயே. (10)

கதிரவனு லொளிரும் பல்வகைக் கல்லைமணியென் றுங் காமர்மண்ணை நிதிவெள்ளி யுலோகமென்றும் பெய ரிட்டும் விலையிட்டு நிகழும்மண்ணைற், சதியான காசு பணமெனச்செய்துந் தரையின்மிடி தனையமைத்தோர், மதியிலாநரான்றிக் கடவுளோசொல்லுவாய்மருள்சேர், நெஞ்சே.

தரையெலா மெமதெனினு மிருப்பிடமோர் முழ
மே நற்றுணியங்கள், வரையென்னக் குவிந்துகிடந்தா
லுமுண்ப தரைநாழி வளரவாவாற், றிரைகடலெலாம்
பருக வுன்னுநா யெனவெமக்குத் தேவை யில்லாக்,
கரையினிதி காணிதானியங்கணீ வேட்டதென் கரு
ததேசொல்லாய். (12)

பொலமிகவுள்ளார்க் குணவின் சுவையின்று பசி
யின்று புசிக்குமன்னம், அலமாயறுமேதாயாக் கவலை
பிணி* பிடர்கர்பல ரருகில்வேண்டும், பலருடலைத்தாங்
கினுமோ சுமக்கரிதூர்ப்பகை பயமிப்பையு ளெல்லா.
மிலகுறுக ளுளரெனிற் செல்வரெவர் மிடியரெவரியம்
பாய் நெஞ்சே. (13)

39-ம், அதிகாரம், பொருளாசை யொழித்தல்,

முற்றுப் பெற்றது.

ஆக, அதிகாரம் 39-க்குத் திருவிருத்தம் 313.

40-ம் அதிகாரம்.

சரீர நிலையாமை.

நெருநலோ வகன்றதின்று விடிந்துபக லாயிற்று
கிமிடந்தன்னி, லருணனே யத்தமிப்ப னிசிவரும்பின்
போமறுநா ளாயிவ்வண்ண, மொருநாளாய்ப் பலநாளாத்
திங்களா வாண்டதுவா வுருவுகொண்டிங், கருநாளா
மாயுளுள் கழிவதனை யுணராயோ வலைநெஞ்சே.

---

* பிடகர் - வைத்தியர்

வையாற்றெசப்புனைநம்பி யனலாழி கடக்கவுன்னு மதியிலார்போற், பொய்யாற்செய் மெய்நம்பி யேதீதே தோ நினைவுற்றாய் புரைசேர்நெஞ்சே, பையவேவார் புட்பிடிக்கக் ககனமிசை வட்டமிடும் பருந்துபோல வையோகூற் றுனைப்பிடிக்க வற்றம்பார்த் தொளித்து நின்ற தறிகலேயோ, (2)

தினமும் * விரேசனங்கொளினு மோயாமன் மலமாரி திரளாப்பெய்யுங், கனம்போலுந் தேகமிதைப் பிரித்து நோக்கிடின் மலநீர்கசியுஞ்செந்நீ, ரினமான தோலென்பு தசைநரம்பு குடரன்றி யினிவேறுண்டோ மனமேநீ யிதையுமொரு பொருளென்ன வுன்னவென்ன மருளுற்றாயே, (3)

மாடாடு விலங்கிறப்பிற் றசைமயிர்தோல் கொம்புதவு மட்கலந்தா, னோடாக வுடையினொன்றுக் குதவும்வீழ் மரங்கல்லுமுப யோகந்தான், வீடாநதிபுயின் மேற பொருளுதவுங்கா டழியின் விறகாமாயக், கூடாகுந்தேகமிது வீழினெதற் குதவுநீகூறாய்நெஞ்சே. (4)

காடுசேர் மரஞ்செடியார்த் திந்தனைநா ணிற்குமெனக் கணிக்கலாஞ்சீர், நாடுநீர்த் தடநோக்கி யித்தனைநாட் புனலென்ன நவிலலாமோர், வீடுதானித்தனைநா ணிற்குமென விளம்பலா மெய்யென்னும்பொய்க், கூடுதானித்தனைநா ணிற்குமெனப் புவியிலெவர் கூறற்பாலார். (5)

நெல்லறுக்க வோர்கால மலர்கொய்ய வோர்காலநெடியபாரக், கல்லறுக்க வோர்கால மரமறுக்க வோர்

---

* விரேசனம் - பேதி.

காலக் கணிதமுண்டு, வல்லரக்க னனையநமனினைத்த போதெல்லாநம் வாழ்நா ளென்னும், புல்லறுக்க வருவ ணெனி னெஞ்சமே மற்றினியாம் புகல்வதென்னே.(6)

முற்றியபின் கனியுதிரும் பழுப்புற்றுத் தழையுதிரு முழுதுமே நெய், வற்றியபின் விளக்கவியு மென்னவோர் திடமுண்டு மக்கள்காயம், பற்றியவக் கருப்பததோ பிறக்கும்போதே பாலப்பருவத்தோமூப் புற்றபின்போ வீழ்வதென நிலையின்றே விதன்பெருமை யுரைப்பதென்னே. (7)

புகைவண்டி யூர்ந்துலகைநொடிக்குள்ளே சுற்றுவோம் புகைக்கூண்டேறிக், ககனமிசைப் பறவையெனப் பறப்போ மோர் புகைக்கலத்தாற் கடல்கடப்போம், வகையாய் மின்னஞ்சலினு லெத்திசையுள்ளோரோடும் வார்த்தைசொல்லவோ, மிகையான புதுமை செய்வோமரணமதை விலக்கறியோம் வியப்பிதன்றே.

அண்டாண்டங் களின்றூற நிலையளவு கூறுவோ மருக்கன்றிங்கட், குண்டாகுங்கிராண மதை முன்சொலுவோங் கடியாரத்துதவி கொண்டு, தண்டாதகாலத்தை யளவிடுவோ மின்னும்வெகு சமர்த்துஞ் செய்வோங், கொண்டாடுந் தேகமிது வீழ்காலமறிவதற்கோர் குறிப்பின்றம்மா. (9)

மண்டலத்தாருயிர் வாங்கநமன் கொண்ட வாயுதத்தின் வகுப்பைநோக்கிற், கொண்டவிடியின் னீர்காலனன்மரங்கள் மண்ணெய்மீன் கொடியபுட்க, ளூண்டிவிலங் கின்பதுன்பம் பகையச்சமூர்வனபே யுலகினுற், கண்டதெல்லா மவன்கையா யுதமென்னிற் றப்பும்வகை காணெநெஞ்சே. (10)

விரியாழி நுண்மணலைத் தாரகையை யெண்ணிடினும் வீந்தோர் தம்மைச், சரியாவெண்ணிடத் தகுமோ வின்னமுநங்கண் முன்னஞ் சாவோர் தம்மைத், தெரியாதுபோற்றினமும் வீண்காலங் கழிக்கின்றாய் திடமா யென்று, மரியாமை யுற்றனையோ வறியாமை பெற்றனையோ வழுத்தாய்நெஞ்சே. (11)

அனமிகலோ வாயுகுறையிற் கூடுண்டுவிடிலின்றுவிநீங்குங், கனமான வெய்யின்மழை பனியுதவா தவையின்றேற் கணநில்லாது, தினமுமா யிரங்கண்டமிமைப்போதாகிலுமதன்மேற் சிந்தையின்றேற், புனன்மொக்குளனவழியு நெஞ்சமே நாஞ்சுமக்கும் பூட்சி தானே (12)

பொன்றுநாளின்ன தென நிலையுண்டேலாழிசூழ் புவியோராயு, ளொன்றிரண்டு நாளெனினும் போது றாருண் டென்றே றுரையுண்டேனு, மின்றோ விக்கணமோ பின்னுறுங்கணமோ மாலையோவிரவோசாவ, தென்றேவென் றொருறுதியில்லாத வாயுளிதற் கென்செய்வோமே. (13)

தொல்லுலகிற் புல்லிலையுண் டுமுதலுயிர்களை நற்சுரபிப்பாலை, நெல்லுடன்பஃ றானியத்தைக் காய்கனியைக்கிழங்கிலையை நிதமுமுண்டு, மல்லுறவே வளருமிந்தக் காயத்தைமரமென்று மாடாடென்றும், புல்லென்று நெல்லென்றுஞ் செடியென்றுங் கொடியென்றும் புகலலாமே. (14)

ஆதியிற்புல் லிலைகனிகாய்த் தானியமாய் மீன்பறவையாடுமாடாய், மேதினியிலிருந்துதாய் தந்தையுடற் சேர்ந்தொருநாள் வெளியேவந்தங், கோதியபண்டங்

தின்று பெருத்திறந்துபல செந்துக்குணவாய்ப் * பஞ்ச, பூதியமாய் நாசமாய்ப்போநெஞ்சே நாஞ்சுமக்கும் பூட்சிதானே, (15)

எமனெதனுமெய் பிறக்குமுன் னெங்கிருந்த தின்னஞ்சிலகாலத் தெங்கேசெல்லு, மமருயர்நீங்கியபின்னோர் கனமுமனைசேபரிந்த னருகேநில்லார், தமர்சவமென்றெடுத்தடுத்தெறிவார் பறவைவிலங்கினங்கூடித் தத்திக்கொத்தி, யமர்செய்து புசிக்குமப்போ தென்னன்று கேட்பவரா ரறிவிநெஞ்சே. (16)

40- ம், அதிகாரம்,

சரீரம் நிலையாமை, முற்றுப்பெற்றது.

ஆக அதிகாரம், 40- க்குத் திருவிருத்தம், 353,

41-ம். அதிகாரம்,

துன்பம்.

பாரில்பார்க்கும் பழங்கண் சகசமாம்
வீரியங்கெட வெந்துயர்க் கஞ்சுதல்
போரினேர்ந்தவன் பொன்றலுக் கஞ்சலு
நீரின் மீன்குளிர்க் கஞ்சலுநேருமே, (1)

பிறந்தசேயுட னேயமும் பீழைதான்
சிறந்துமாநிலஞ் சேர்ந்தபின் ஞருயி
ரிறந்துபோமள வுந்துய ரெண்பதை
யறிந்துநீர்விட்டனுங்கலை யொக்குமே (2)

---

* பஞ்சபூதியம்-பிருதிவிமுதலிய வைகம் பூதங்கள்.

வேறு.

கோடிபொன் னுடையவ ரெனினுங்கோமுடி
சூடியவேந்தரே யெனினுந்துன்பொடுங்
கூடியவாழ்க்கைய ரன்றிக்கூறுங்கா
ணீடியசுகமுளோர் நிலத்தினில்லையே (3)

பாக்கியநிலையெனும் பதகரோர்துயர்
தாக்கிடிற்பொருதுயிர் தன்னைப்போக்குவ
ராக்கியவாக்கமு மனுருமொன்றன
நோக்கியசிலரை நோயென்செய்யுமே. (4)

வேறு.

ஒளியினோடிரு ணிழலொடு வெயில்பொழி யுதகத்
துளியினோடுமின் னசனிமா மலையையுஞ் சுழற்றும்
வளியினோடிளந் தென்றலும் வருதல்போன் மாக்கள்
களியினோடருந் துயரமுங் கொள்ளுவர் கலந்தே. (5)

உழுதுபுன்செயப் புன்செயு நன்செயா முயர்பொன்
முழுதுந்தீயினிற் சுடச்சுட வொளிருமான் மொழியும்
பழுதின்மாமணி தேய்பட வொளிமிகும் படர்கொண்
டழுதுநொந்தவர்க்கன்றிமற் றவர்க்கற மரிதே. (6)

41-ம் அதிகாரம்.

துன்பம் முற்றுப்பெற்றது

ஆக, அதிகாரம், 41-க்குத் திருவிருத்தம், 365.

42-ம் அதிகாரம்,

அறஞ்செய்தல்.

பசிவந்தபின்னெல்லை விதைப்பதுபோல் வீட்டிற் றீபற்றிக்கொண்டு, நசியும்போதகதையவிக்க வாறுவெட்டல்போலும் போர்நடக்குங்காலை, விசிகநூல்கற்கமுயல் வதுபோலுங் கபமிஞ்சி விக்கிச்சிக்கி, யிசிவுகொண்டு சாங்காலத்தெப்படி நீயறம்புரிவா யிதயப்பேயே.

எத்தொழிலுமுற் பழக்கமின்றி யெய்தாதறமென் னுமிணையொன்றில்லா, வத்தொழின்முற் பழக்கமின் றிச் சாங்காலத்தமையுமோ வருமன்றற்கு, வத்திரம் வேண்டிற் பருத்திவிதைத்துமுன்ன ரெய்யாமன்மணஞ் செய்காலத், தொத்ததுகில் வேண்டுமென வெத்தனை பேர் முயன்றாலு முறுமோநெஞ்சே, (2)

சிற்பநூ லிலக்கணனூன் வயித்தியநூன் மரக்கல நூல்செருநூலின்னம், பற்பலநூலுணர்வதினும் புண்ணியநூலரிதாமோ பகரந்நூல்கள், கற்பதன்முன்னரி தெனினும் பின்னெளிதா மதுபோன்ற கருமமென்னு மற்புதநூன் முயலுவோர்க்கெளிதாகு மதைபடைவா யறிவினெஞ்சே. (3)

தினங்கள்செலச் செலவேதோ பெற்றதுபோன் மகிழுநெஞ்சே தினங்களோடுங் கனங்கொளுமூன்று யுளுள்கழிவதுண ராயுயிர்தீர் காயஞ்சேரும் வனங் கடுகி வாவென்ன விளித்துன்பாற் றினநெருங்கும்வண் மையுன்னி, முனங்கொளறி யாமையைநீ யினங்கொள் ளா தறஞ்செய்ய முயலுவாயே. (4)

இன்றருணோ தயங்கண்டோ முயர்ககன முகட்டின்மிசை யிந்தப்பானு, சென்றடைய நாங்காண்பதை யமதைக் காண்கினுமேற்றிசையிருக்குங், குன்றடையு மளவுநா முயிர்வாழ்வ தரிததன்முன் குறுகும்கூற்ற, மென்றச்சத் துடன்மனமே மறவாமலறவழியி னேகு வாயே. (5)

சிற்றுதர *போஷணைக்கா மலையேறிக் கடல் கடந்து தேயமெல்லாஞ், சுற்றியனுதினமலைவாய் நித்யபேரின்பசுகந் தோயவேண்டிச், சற்றுமுடல்வருந்தலின்றி யலைதலின்றி யோரிடத்தே தங்கிமூளும், பற்றினையேதுறந்துசும்மாவிருந்தறஞ்செய் வதிலென்ன பாரநெஞ்சே.

கலமூறுஞ் சிறுநீரைவிரைவினிறையா விடினக்கலந்தான்மிக்க, சலமூறியழுந்துமது போற்பவத்தை விரைவுற்றுத் தள்ளிடாம, னிலமீதியாம்வாளா விருப்போமேற் பாவங்கணிறைந்துமோக்க, நலநீங்கிநரக மெனும் பேராழி தனில்வீழ்ந்து நலிவோநெஞ்சே.

பெருவெள்ளஞ் சேர்ந்தபின்ன ரதைத்திருப்ப வொண்ணுமோ பெருத்துநீண்ட தருவின் கோணலை நிமிர்க்கத் தகுமோ பாவங்களைநீ தள்ளிமேலாங், கரும மதின் முயலென்றாற் பின்னையாகட்டுமென்றாய் கசடு விஞ்சி, யொருமலைபோ லானபின்னெவ் வாறதைநீ சாம்பருவத் தொழிப்பாய் நெஞ்சே. (8)

ஏதிலார் பொருணோக்கி யிச்சையுறல் கவர்ந்த தொப்பா மெழின்மின்னாரைக், காதலாய்நோக்குதலே கலந்த தொப்பாம் பிறர் கேட்டைக் கருதலன்றோ,

*போஷணை - ஆதரிப்பு.

வேதையுறக் கொன்றதொப்பா மிவ்வாறோர் பயனின்றி மேவும்பாவ, மாதவினைம்பொறி வழியே மனஞ்செலா தடக்குவா ரறிவுளோரே. (9)

பரியூர்வோன் றனைமறந்து பரிக்குப சாரங்கண் மிகப் பண்ணல்போலும், பெரியகடவுளைப் பணியாதா லயத்தை யலங்கரிக்கும் பித்தர்போலு, மரியபொருள் வெளியிட்டுச் செப்பைக்காத்திடல்போலு மான்மாவுக்கே, யுரியவறம் புரியாமலுடலை நீயோம்புகின்ற யுள்ளப்பேயே. (10)

ஓருயிரீருடலென்ன நட்டமைந்தர்மாதர்நமதுயிர் நீங்கிற்றம், மாருயிரைத் துறப்பரோ வழுவதுந்தம் முணவுவைக்க வமைந்தபாண்டம், பேருலகி லுடைந்ததென வழுவதன்றி நமக்கிரங்கும் பேரிங்குண்டோ, சாருமிவர் நேயத்தாற் பவஞ்செய்து வீழுத்த றகுமோநெஞ்சே. (11)

வேறு.

உளதிலையென்ன வுரைப்பதேவருத்த முண்மை கூறிட லெளிதாகுங், களவுகட்காமங் கொலைசெயல் வருத்தங் காவலன்றண்ட மூர்ப்பகையா, முளமதை வருத்து மிகபரங்கெடுக்கு முண்மையா வீதெலாமுன் னிற், களநிகர்பாவஞ் செய்தலைகட்டங்கருதறஞ்செய லெளிதன்றோ. (12)

ஒருவனைப்புதிதாக் காணினுமவனோ டுறவுசெய் யினும்பணிகொளினும், பெருமையோன்றீயனெனவறி யாமுன் பேசிடார் தீயனேற்பெயர்வார், தருமநற்குண

த்தைத் தீயரும்புகழ்வார் சழக்கினைச்சழக்கரு மிகழ்வா, ரிருமைதீரறத்தின்பெருமையுமறத்தினிழிவுமீதுன்னுவாய் மனனே (13)

பலர்கழல்வருட மாதர்களாடிப் பாடவோர் பகலெலா மனிச்ச, மலரணைகிடத்தல் வருத்தமாமன்றோ வார்த்தவெந்நீர். பொருவுடல், மலகறுகாலநரகவெந்தழலாழ்ந் தயர்வுறவொண்ணுமேவவியாப், புலவையே விளைக்கும் பவத்தைவேரறுத்துப் புண்ணியம் பிரிந்திடாய் மனனே. (14)

வேறு.

சூற்றயர்க்கஞ்சுவாட்க்குச் சுதரிலைப்பயனொன்றில்லைக்
காற்றினுக்கஞ்சாநின்ற கலத்தினுக்கவிழ்தங்கைப்பென்
றேற்றிடவஞ்சினரோக் கியமில்லையின்னற் கஞ்சிற்
சாற்றருமறமுமில்லைத் தனிப்பாகதியுமின்றே. (15)

இந்துமீன் பருதிபக்கி யினவிலங்குகண்மரங்க,ளைந்து பூதங்களேனையாவுமோ வாதெஞ்ஞான்றுந், தந்தொழில்செய்துவாழுந் தனியறம் புரிதலென்னு, நந்தொழில் புரிகிலேம்யா னாய்த் தொழி லுடையநெஞ்சே.

42-ம், அதிகாரம்,

அறஞ்செய்தல் முற்றுப்பெற்றது.

ஆக, அதிகாரம் 42-க்குத் திருவிருத்தம் 381.

43-ம் அதிகாரம்.

கணிகையரியல்பு.

பூவையிவட் ஒளித்தநிதி கணக்கிலையோர் கடன் காரன் புலிபோனம்மைச் சாவடிக்கே யிழுக்க மயிலை யிடர்தீ ரென்றிவடன் றாளில் வீழ்ந்தோம், பூவில் வைத்த நிதியையோர் கிழப்பூதங் காத்தினியபூபாவுன் னைச், சீவபலியிடி னீவேனென்ற தென்றாளென்செய் வா டெரிவைதானே. (1)

நேரிழைநம் முடனிறப்ப னெனமுன்ன முறை செய்தானிருபனம்மை, யீரவெனக் கொலைக்களத்திற் கிழுக்கவடி பற்றிப்பின் னிரங்கிவந்த, காரிகையை நோக்கினோ மிஞ்சியவோர் கோவணத்தைக் கருகிவந் தே னொருவீர்நம் மிருவர்க்கு நீர் வீயினு னிறந்த தொக்குமென்றாள். (2)

மனைதாலிமுதல் வேசைக்கீந்துவே றொன்றுமின் றி மயங்கும்வேளை, புனையவோராணியிலா திருந்தவில் லாள் கழுத்தினிலோர் பொட்டைக்கண்டு, மனமகிழ் வுற்றேதென்றேன் பரத்தையர்போ லெனக்குமருள் வாய்க்கவேண்டி, யினமாப்பொட் டணிந்து கொண்டு தாசியானேனென் றுவியம்பினளே. (3)

ஆவியனையானையோர் போதுபிரிந்தவளில்ல மணு குங்காலை, மேவுபாங்கியைக் கண்டாண் டுணையின்றி வருந்தினளோ மின்னுளென்றே, னவிதனுக்குண்டோ காண் மயிர்ப்பஞ்ச மலப்பஞ்ச நாய்க்குமுண்டோ, தே விதனக்குண்டோ வாண்பஞ்சமென்றா ளிதன்பொரு ளைத் தெரிகிலேனே. (4)

செவ்வையுறு பொருள் கவர்ந்த பின்னரென்னைக் கைவிட்டதேனோநோக்கிக், கொவ்வைவாய் மயிலேயிச்சினமேதென்றேன் வனசக்கோயின்மேவு, மவ்வையை முன் சேர்ந்தபிழை பொறுத்தவனே யென்னகத்துக் கழைத்தேனன்று, டவ்வையையுமருவினீ ரினப்பொறேனென்றாடிச் சலங்கொண்டாளே (5)

உண்ணுமலிரவலர்க்கு மீயாமற் பூமிதனிலொளித்த பொன்னைக், கண்ணுடனக்கீய வேண்டியதைத் தாண்டுகின்ற காலந்தன்னின், மண்ணுளனை நோக்கி யெனக்கீந்த பொருளையினி வாங்காநின்ற, பெண்ணுளனை யுன்வாய் கொட்டுவ னென்றே நகைத்துப் பேசினளே. (6)

மூணங்காலே வருடுமவள் காங்கோல்போன்முதுகின்மேன் மோதப்பூமே, லனங்கான மயிலென்ன நடந்து செய்த கழனம்மே லாடித்தாக்கத், தினங்கான ரசமுதவு வாயேசி யுமிழவிந்தச் செய்கைகண்டு, மினங்காத வாயவனில் லேகுதியோ நிற்றியோ வியம்பாய் நெஞ்சே, (7)

ஆவலாலவகாலத் தவளின்னுன் புகச்சிலபே ரங்கிருந்து, மேவியோடினர் சினமுற் றிவராரென்றேன் மாமி விரைவாய்வந்து, பூவையிவளின் பிரிவாற்றுத முப்பாங் கியர்க்குனைப்போற் புருடவேடந், தாவரவே தரித்தவட்குக் காட்டினன் வேறன்றென்று சாதித்தாளே. (8)

பொருளொன்று நாந்தந்த திவட்கதற்கில் லாமை பிணி பொய்புரட்டு, மருளொன்றுங் கட்காமங் கொலை

களவு சூதுவசை மரணத்தோடு, மிருளொன்று நரகமின்னு மிவள்பானுங் கொண்டதற்கோ ரிலக்கமுண்டோ, தொருளொன்றும் பாரினம்போற் சமர்த்தாக் கொண்டெவர் வணிகஞ் செய்யவல்லார், (9)

இரதியனை யார்பாற்போய் நாம்வருமுன் னெங்குசென்ற யெனவில்லாளைப், பொருதிவின விடவிரதிபுருடனையாற்பாற் போய்ப் புணர்ந்தேனென்றாள், விரதமுள்ளா யெங்கிதை நீகற்றதென்று மும்மிடத்தும் விருப்பாயும்மைச், சுரதஞ் செய்பவரிடத்துங் கற்றதென்றாள் வேறினிநாஞ் சொல்வதென்னே. (10)

சுவையுணவு தானிருக்க மலந்தேடி யோடுகின்ற சுணங்கன்போலுங், குவையதனிற்கடந்து நல்லிடநீங்கித் திரிகின்ற *கோகுபோலு, நவைதீர் தண்ணதிதுநீ ரருந்தாதங் கணநீரை நாடல்போலுஞ், சிவையனைய காந்தையரை வெறுத்தசடர் வேசையரைச் சேர்வர் மாதோ. (11)

கோடுமுடன் மாமியெனை மதுவுடன்புலாறிருடிக் கொணர்தியென்றாள், பாடுபெறும் பார்ப்பானுனென்றேன் மற்றவையுண்ணப் பவம்போமென்று, ணுடும் வசை யுயிருய்யே னென்றேனீ மாய்ந்திடின் மூன்றுன் கொடுத்த, வோடுமற் றமருகர்க்கா நான்றுக் கொள்ளெனக்கயிறொன் றுதவினளே (12)

பசையறவெம் மாவியன்னள் கைப்பொருளெலாம் பறிக்கப் பசியானன்கு, திசைமுகமு நோக்கலாற் றிசைமுகனு னேம்வாயிற் றீயாளிட்ட, வசையானமண்

---

* கோகு கழுதை.

னுண்டு மாயனானோங் கையின் வாங்கு மோட்டா, விசைமேவு மீசனானோம்புவியு னமையொப்பா ரெவர் தாமம்மா. (13)

விடமுண்டாம் கூற்றுதைத்தா னலாகைவென்றான் புரமெரித்தான் விடையோனென்னக், கடலுலகிற் சைவரவன் புகழ்விரிப்பார் கணிகையர்கட் கடுவையுண்டு, குடமுலையாங் கூற்றுதைத்துத் தாய்க்கிழவி யெனும்பேயைக் கொன்றன்னார்வா, ழி - மென்னும் புரமெரித்தா னெனில்யாமு மவன்புகழை யியம்புவோமே.

கொடியாளன் பற்றபின்னர் பலர் நம்பால் வந்துன்னைக் கூடிக்கொண்ட, மிடி யென்றும் வாழ்கவென்றாரே னென்றே முயிர்க்கிளையாள் வீட்டினீவந், தடிவைத்தபோதெல்லாங் கூடையுரி பரண்கட்டி லடியடுக்கு, நெடியசிறை யிருந்தோமச்சிறையையுன்றன் வறுமைவந்து நீக்கிற்றென்றார் (15)

தெரிவையினட் பறிவான்மாண் டெனக்கிடந்தேமாமிவந்த சிலரைநோக்கி, யுரியபாடையி லிவனையெடுமென்றான் வீண்செலவே னுலைந்தோர்காலிற், புரிவீக்கி யிழுமென்றன் னம்பணித்தாளது செய்யப் புகுந்தோர்தம்மைத், தெரியாமலுயிர்தப்பி யோடிவந்தோமங்குறிலெஞ்சீவன் போமே. (16)

சாமியுனைப்பிரியேனென் றுரைத்துப்பின் னகன்ற மின்னாடன்னைநோக்கித், தோமிலாநின்மாற்றந்திறம்பியதேதென்றேனீ தொகுப்பாற்றந்த, சாமியைநீங்கே னென்றே னுனைச்சொன்ன தன்றுநீ சாமியானாற், பூமியினுள் மாற்றென்ன விடையென்ன விலையென்ன புகல்வாயென்றாள். (17)

ஒருவண்டகலத்துண்ண வொருவனுடை யினை யுடுக்க வொருவன்றூங்கும், திருவமளி துயிலமனம் பொருந்ாது பலரெச்சஞ் சேர்படிக்கம், பொருவு வேசியர் வாயெச்சிலை யுண்ணப்பலபேரைப் புணர்ந்த சுத்த, முருவு கொண்டா லனையவர்தோன் சேரவே யெவர்க்கு மனமொன் றுங்கொல்லோ. (18)

பொருளின் சேடத்தையிவட் களித்தோம்வாய்ச் சேடமெனும் பொருளளித்தா, டருமனெனத் தன மளித்தோ மெமக்கிவளுந் தருமனெனத் தனமளித்தா, ளருமையாம்பலியளித்தோ மிவளெமக்கும் பலியளித் தா ளாழிசூழ்ந்த, விருநிலத்தி னீதன்றி பின்னுமிவ ளென்செய்வா ளெமக்குத்தானே.

கொலைஞர்தமைக் கொலைசெய்து கள்வரைவெஞ் சிறையிலிட்டுக் குற்றஞ்செய்யும், புலைஞரைத் தண்டித் தடக்கு நம்மிங்கிலீஷ்மன்னர் புருடராவிக், குலைவைக் குந் தன்மையளாய்ப் பாதகமெ லாந்திரண்டோருரு வாய்வந்த, விலைமாதைக்கொல்லாம லுலகத்திலே துக் கா விடுத்தாரம்மா. (20)

பணயமே திரணமன்புபெரிதென்ற பாவைபொ ருள் பறித்தபின்ன, ரணையேனென்றாளணங்க னுனக் கினையோ வென்றே மவ்வறிவிலான்பூங், கணைகளோயே விடுத்தனனு னஞ்சுவனோ காணமெனுங் *கதிரங் கொண்டென் னினைமுலைமேற் றெறித்திடின் வெல்லா னென்றா ளிவண்மனம்வல் லிரும்போவம்மா. (21)

வடிவுமிகு தொழுநர்தமை வேசியர்வவ்விடவருந் தும் வாட்கணல்லிர், கடினமனக்கணக்கிலா வாடவர்சம்

* கதிரம்-பாணம்.

போக முயிர்கவர்தல்வஞ்சங், குடிகெடுக்குந் தொழி
லுங்கட்கில்லையென வெறுத்தனரக் குணங்களெல்லாம்,
படியிலுமக் கமையுமேற்கணவர்திரு வருளுமக்கும்
பலிக்குமன்றே. (22)

பகருவங்கம் பலசரக்குத் தரகுசெலவாள் கண்
முதற்பணங்கூட்டின்றி, யகனிதம்பக் சரக்கொன்றைப்
பலருக்குந் தினந்தினம் விற்றரும் பொன்வாங்கிப்,
புகலுமந்தச் சரக்குங்கை நீங்காதுவணிகஞ்செய்பொது
மின்னார்போற், சகமதினிற் பேரறிவினோடு வாணிபஞ்
செய்யும் சமர்த்தருண்டோ. (23)

கலவிசெய்தமாதென்னை விலைகேட்டா ளுடனேக்
கக்கலந்துகாம, நலமுண்டவுனக்கு விலையேதென்றேன்
சவமனையநான்சுகிக்க, விலையென்றாள் பொய்யென்
றேன் வள்ளுவர்கூறியகுறளா மினியநூலில், விலைமா
தைச்சேர்தல்பிணந் தழுவியதை யொக்குமென்றார்
வீணேவென்றாள், (24)

தையலில்லம் புகுப்போதென் சுதன்குரலைக்கேட்
டொதுங்கித் தாழ்வாரத்திற், பையவென்றிச் செவி
கொடுத்தேன் பாலனைப் பார்த்தக்கோதை பணமீ
யென்று, ளையனிறந்திடிலெல்லா முனதென்று னவன்
றாங்கு மமமயம் பார்த்தோர், சையமெடுத் தவன்றலை
மேற்போடுவாய் போடுமுன்னென்றழுவேனென்றாள்.

ஒருமாது தன்றுணைவன் சீடனைமற்றொருமாதவ்
வும்பர்கோனை, யொருமாது;சோதரரைவரைச்சேர்ந்து
கன்னியரென் றுயர்பேர்கொண்டா, ரருமையாவெமைச்
சேயர் சோதரர் சீடரையியம்பர்க் கரசைச்சேரும்

பொருண்மாதக் கன்னியர்க்கெலாஞ் சிரோமணியென்
னப் புகலலாமே. (26)

விதிமுதன் மூவரிலெ வருன் கடவுளெனச் சிற்றி
டையை வினவப்பூவா, ழெகிரிறமணியனென்று ளான்
கோயிற்றசியுனக் கியல்போவென்றே னிதியுடன்மைந்
தரைப்படைத்தன் றாதையென் காலில்வைத்து நித
மும்வீழ, மதிபடைத்துத் தமணியப்பேர் தான்படை
த்த விதிக்கிணையார் மகிபவென்றாள். (27)

அந்தமுளா ரூரிமையா வத்தமுளார்வாலியா
வவன்பின்றோன்றி, வந்தவனுனையினேன் மூவரிலோரரி
யரியின் மகனையன்னாள் பந்தமுறச்செய்தனனம் மிரு
வரையார் சேர்த்துவைப்பார் பாவாயென்றே, னைந்து
லோகத்துளோ ரரிநமையோ ரரிசேர்க்கு மறிநீயென்
றாள். (28)

இனியானை நோக்கியத்தை சக்கிரிக்குச் சொக்குத்
தூளிடுவாயென்று, தொனிகேட்டுச் சினந்துநான் குய
வனோவென்னை மயக்கத் தூளோவென்றேன்; றனியா
சாஞ் சக்கிரிநீயானையினின்னடி மலர்தோய் தான
மெல்லா, நனியேசொக்கெனுங்கனகப் பொடியிறை
யென்றேன்முனித னன்றோவென்றாள். (29)

எனையன்றி மற்றோரைச்சேர்ந்தறியே னென்ற
கன்னியிருதிங்கட்குட் டனையனீன்றாள் புதுமையென்
னென்றே னினியும்மை தழுவியிச்சேய், சினையாயென்
மதியிலிறந்தேனிகத்து முனைப்புணரச் செய்தகோன்
பான், முனையல்கு மிருமாத நிறைதுடனிம் மகவீன்
றேன் முதல்வவென்றாள். (30)

சிலர்மயில்வீடுற்றனரென் றறிந்துண்மை யறிய வங்குசெல்லுங்காலே, புலனிழந்து நூறுண்டுங்கடந்த கூறுடன்மாமி பூபாமாரன், மலர்வாளி விடுத்தனன் சே ரேனையென்ன, நெருங்கிவழி மறித்தாளப்பேய், கலவிதனக்கஞ்சி மீண்டோடினே னவள் கதையைக் கண்டிலேனே. (31)

கைத்தனநா மிழந்தபின்கூன் முடவரந்தகர் நோயர்கடைக்குலத்தர், நித்தமருவிடவுள்ளமுவந்தயின்னே நோக்கியிது நெறியோவென்றே, மத்தமதிற் குருடனஞ் சாதியிழிவுளதோ வஃதளிப்போர் மேலோ, ரித்தரையிலெனக்கியார் கீழ்க்குலத்தர் சாதியிவை யிரண்டென்றுளே. (32)

கனைகடன் மணலையெணினும் வேசியர்சே ராடவர்க்கோர் கணிதமுண்டோ, வனையநீ ரளவிடினு மவனுட்கொள் சுக்கிலத்துக் களவுண்டோவவ், வினையவர் மெய் யுரோமத்தை யெண்ணினுநோய்த்திரளெண்ணவிதானமுண்டோ, யினையவரைச் சேர்தல்பெருந் தீயினிடை மூழ்குதலே யேய்க்குமாதோ. (33)

விலைமகட்கென் றயலகத்திற் கன்னமிட்டுத் துளைவழியுள் விட்டதாளைக் கொலைவாளாற் றரித்தனர் கூகூவென்றேன் வேசையென்பாற் குறுகியுக்கக், கலைசோதித்தொன்றுமிலாச் சினத்தாலவ் வகத்தாரைக் கதறிக்கள்வன், றலைதுமியுந் தாடுமித் தன்னென்றுள் வெருவியுடல் சாணுனேனே. (34)

திருவெலாங் கொள்ளைகொண்டா டனைநோக்கிச் செவ்வதாத் தேனீயென்றேன், பெருவாயெச்சிலையுமி

ழ்ந்தாள் பேசென்றேன் கொடுஞ்சொற்கள் பேசலுற்றாள், மருவென்றே னுதைத்துக் கையாலிடித்துக்கடித்தினிய மதனநூலா, மிருபாததாடனமா லிங்கணமெல் லிதழ்சுவைத்த லென்றாளம்மா, (35)

தரணியின்மிக் கெழின்மாதை புனைநூல தெய்வமெது சாற்றுயென்றே னிரணியனென் றெய்வமென்றாள் விட்டுணுவோர் நரசிம்மமெனவேவந்தான் முராணுறவொண்ணு தென்றேனிரணியா சுரனன்றுமுராரி மெய்மேற், கிரணவுடையெனப்புனைந்த விரணியனென் றெய்வமென்றாள் கிளியன்னாளே. (36)

பொய்யேந்து மனைவேசைக் காத்திருடிக் கையிரண்டும்போக்கிக்கொண்டே, மையேந்துவிழிமனையாட் கிடையேந்துந் துகிருன்றிமானந்தன்னைக், கையேந்து மிரக்கவோ கையிலாளா றொளிக்கையையேந்திச் செய் யேந்து முலகத்திற் பலியேந்தியுண்ணுவ மியாஞ்செப் பாய் நெஞ்சே, (37)

சேபிழையின் சேடியர்முன் னெமக்கிதஞ்செய் வான்புலி வெஞ்சினமாகோகு, நாயோரிகரடியெனக் கத்திமகிழ்விப்பா ராகலிந்தபின்னத், தீயவிலங்கினச் செய்கை நங்கண்ணே செயத்தொடுத்தார் திருவையொப்பா, ளாயமிருகங்கட்கோ ராசாளு ளவட்கிணை நாமாயினோமே. (38)

வண்ணமல ரமணியின்மே லிருக்கையிலோர் பரபுருடன் வரவுநோக்கிப், பண்ணமரு மொழிமின்னாள் விளையாடல்போற்றன்கைப் பதுமத்தாலென், கண்ணதனை யூடிவிட்டென்ன நகைத்தாள் வேற்றாளார்களீ

யென்றேன், கண்ணடிபோற்றி கழுகமென்றன் கபோல மதி லுன் னுருவைக்கண்டா யென்ருள். (39)

இரவினிலென் னுடன்றுயின்ற கோதையடிக்கடி வெளியேயேகிமீண்டாள், காவறிவான்பி பின்றொடர்ந் தேன் கொல்லையிலோர் காளையொடுங் கலந்துநின்ரு, ளரவமெனச் சீறியவாண் மேல்வீழ்ந்து தாக்கவுயிரற் றுவீழ்ந்த, வுருவையுற்றுப் பார்க்கவென்ற னொருசே யென் றறிந்துநெஞ்ச முருகினேனே. (40)

43 - ம், அதிகாரம், கணிகையரியல்பு, முற்றுப்பெற்றது.

ஆக, அதிகாரம், 43-க்குத் திருவிருத்தம்-421.

44-ம் அதிகாரம்.

விலங்கினத்துக்கிடர்செய்யாமை.

விலங்கினங்கட்கு வாக்கும் வினையுணர் ஞானத் தோடு, நலங்களுமில்லை யென்ருலு நாரைப்போற்சீவன் மெய்யைம், புலன்களு மின்பமின்பப் புணர்ப்பறி நெ ஞ்சிநோடுந், துலங்கிடு விலங்கைவாட்டித் துயர்செய் வோர் நரகத்தாழ்வார், (1)

மானிடர் துயரைச்சொல்வர் மற்றுளோரதனைத் தீர்ப்ப, ரானவருறுநோய்நீக்க வனந்தமாம் பரிகாரங் கண், மோனமா யிடுக்கண்டாங்கி முறையிட வறியா தல்லற், ருனுறு விலங்கைக் கொல்வோன் றருமனோ பேயோவம்மா. (2)

கொடிய வெவ்விலங்கை யெல்லாங் கோறலே முறையென்றுனு, மடிமைப்பா னரர்க்குழைத் தீண்டயர்விலங் கிணைமாசிலாக், குடிஞையை யடித்துதைத்துக் கொண்றுண்போர் சமயம்வாய்க்கிற், படியின்மாக்களையுமுண்பர் பழக்கம்போற் றீயதுண்டோ (3)

ஊமரைப் பித்துளாரை யுணர்வில்சேயரை மின்னுரைப், பாமரர் தம்மைமிக்க பரிவொடுங் காத்தல்போல, நாமறவிலங்கைக் காப்பர் நல்லவரதை வருத்துந், தீமன முடையோர் துன்பஞ் செய்வர் மானிடர்க்கு மம்மா (4)

காயிலை கிழங்கேதக்க கறியதா மதனையுண்போ, ராயுளுள் வளருழுந்த லருந்துவோ ருயிர்கட்கெல்லாந், தாயெனு மொருகருத்தன் சாபத்தைப்பரிப்பாரென்னிற், பேயினுற் கொடியவன்னோர் பிழைக்குமாறெவன்கொலம்மா (5)

45-ம், அதிகாரம்.

பன்னெறி.

தன்னைத்தா னறிதல்.

தன்னைத் ததகுணந் தன்மையைத் தேரவே
யுன்னுகின்றவ னேங்கிய நட்பினோர்
நன்னயச் சொனம் பாமனள் ளார்தினப்
பன்னுமாற் றங்க ணம்பிப யனரோ (1)

பெரியோ ரடக்கம்.

தேமலி சுவைக்கனி பலசெறிந்துயர்
காமரம் வளதல்போற் கலையுணர்ந்திடும்
தூமன மாட்சியோர் தொழுவர் யாரையும்
பாமர ரெவரையும் பணிந்திடார்களே. (2)

இதுவுமது.

குலமணிவெளியுறு தாழ் குரவையூ டொளிந்திருக்குச், சலமிசை யெவருங்காணச் சஞ்சரித்திடுந் துரும்பு, கலமென மானம்பூண்ட கலைவலோ ரடக்கிநிற்பர், புலனில் சீத்தையர் தமைத்தாம்புகழ்ந் தெங்கும் திரிவர்மாதோ (3)

உபசரித்தல்.

எதிர்சென்று முகமன்கூறி யிருக்கையு நல்கியுண்டே, யதிசய மெனவிஞ்வி யன்பொடு முகமலர்ந்து, துதிபுரிந் துபசரிக்குந் தொழலிலுற் செலவொன்றில்லை, யதிர்கட லுலகுளோர்த மன்பெலாம் வரவாமாதோ, (4)

பெரியோர் சாதற்கஞ்சாமை,

அறப் பெருங்கட லன்னுன்ற னடிமலர் காணுவண்ண, மறைப்பரீத யுடற்படாமா மரணத்தா லதனைப்பாரிற், றுறப்பவர்க் குடனேயத்தன் சொரூபமேதோன்றலாலிங், கிறப்பது பிறப்பினுந்தா னினிதற வர்க்குமாதோ. (5)

நம்பிமோசம்போகாமை,

அத்திசூ ழுலகிற்சில்லோ ரகத்தொன்றும் வாக்கிலொன்றும், வைத்திதஞ் சொல்லாவியாவும் வனச்செவியேற்ப தன்றிச், சத்தியமெனக் கொண்டேகல் சக்கினை முடிநீண்ட, பித்திகை யேறிச்செல்லும் பேதைமை நிகர்க்குமாதோ, (6)

பகைவர்க்குதவிசெய்தல்.

நள்ளுநர் தமக்குமென்று நன்றெமக் கியற்றுவோர்க்கு, முள்ளுவங் கியற்றுகின்ற வுதவிதா னரியதன்று, * புள்ளுவ மிழைக்காநின்ற பொருந்தலர்க்காற்றுநன்றி, விள்ளும்வீட்டின்பந்தன்னை விளைக்கின்ற வித்தா நெஞ்சே, (7)

உலோபர் பொருள்,

தமதென வுலோபரீட்டுந் தனத்தினைக் கொடுங்கோன்மன்ன, ரெமதென விருப்பர்கள்வ ரெமதென்பர்கிளைஞரெல்லா, முமதெம தெனவாதிப்ப ருலகென தென்னும்யாமு, நமதென்போம் பாரந்தாங்கி நலிவதென் பிசினரம்மா. (8)

நற்குணச்சிறப்பு.

விலவிகற்பதுவேகற்பு கூனுடல் விருத்தைகற் பரிதன்றுகலையெலா, மறவுணர்ந்ததக்கோர் நெறிநிலை நெறி + லஞ்ஞைகொண்டவ ட்க்கங்கதழ்வன்று, திறவிஞர் பொறையே பொறைகொஞ்சமுந் திறமிலார்

* புள்ளுவம் - வஞ்சம். + அஞ்ஞை அறிவிலான்.

தம் பொறுமைதலையன்று, மறலுளார்கொடையேகொ
டைசீரெலாம்வாய்த்தசெல்வர் கொடைபெரிதன்றரோ

கொடுஞ்சொற்கூறாமை.

உருமையின் னினைத்தன்பாற் கொண்டுதகமன்னுயிர்க்கு நல்கும், கருமுகி லெனக்கண்ணுலென் காணினுங் கேட்பினுஞ்சூழ், பருவரலேதி லார்க்குப் பயக்கும் வன்சொல்லைநீத்து, மருவிய நலங்கலந்த வசனமேபகர்வர் நல்லோர் (10)

சமயமறிந்துபேசல்,

மதிமுதற் புகுவதெல்லா நன்ககட்டிடையடக்கு
மதிர்கட லெனவுமீயா ரருத்தமஞ் சிகையேபோலும்
வதிசெவி நுழைவதெல்லா மனத்தினு ளடக்கித்தக்க
ததியறிந்துரைப்பதன்றிச்சகலர்க்குமுரையார்மிக்கோர்.

மனோரம்மியம்.

பறவையும் விலங்குந்தீனி பசித்தபின் றேடுநாளைக், குறைவெனுங் கவலையில்லை யுணவன்றி யிறந்ததில்லை, வறியரெம் மிற்பலோரிவ் வையகத்துளார்தேவீந்த, சிறிதுமேபெரிதென்றெண்ணிச் சிந்தையே மகிழ்ந்துகொள்ளே. (11)

வேதாந்தம்.

ஈசனையே துதித்தலவன் றிருநாமத் தொடுகிருநா ளினைக்கொண்டாட, னேசமாரனை தந்தைவணங்கல் கொலை செய்யாமை நிதங்காமத்தை, நாசமாக்குதல்

களவுபொய்நீக்கல் பிறனில்பொ னயந்திடாமை மாச
றுமிவ்விதி பத்தும்வேதாந்த மெனக்கடவுள் வகுத்தி
ட்டானால். (12)

இதுவுமது.

முன்னவன் பொற்பத முன்ன முன்னவுந்
தன்னுயி ரெனப்பல வுயிரைத் தாங்கலும்
பன்னெறியாவினும் பளகிலாவரு
நன்னெறியாமென நவிலும் வேதமே. (13)

45-ம்-அதிகாரம், பன்னெறி முற்றுப்பெற்றது.

ஆக, அதிகாரம் 45-க்குத் திருவிருத்தம்.

வாழி.

ஆதிநூலென்றும் வாழ்க வறநினந் தருமம் வாழ்க, வேதியர்நாளும் வாழ்க மெய்யடியார்கள் வாழ்க, தீதிலாங்கிலேய மன்னர் செங்கோலென்ஞான்றும் வாழ்க நீதிநூல்படிப்போர் கேட்போர் நித்தமும் வாழ்க மாதோ.

முற்றிற்று.